ജ്ഞാനനിക്ഷേപിണി

ജനുവരി, 1928

2 22

72
m 211, N26 AG
N28·2·22
169832

ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கி ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா வி[illegible] நிறைந்திலங்கும் உயரிய செந்தமிழ் மாதப் [illegible]திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநு[illegible] நாயு[illegible]

“ எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.)

கமலம் - 2.	சென்னை: பிரபவஹூ தைமீ 1உ	இதழ் 22.
Vol. II.	1928-ம்ஹூ ஜனவரிமீ 14உ	No. 22.

OFFICE OF THE REGIS[TRAR] 25 JAN 1928 MADRAS

ஆநந்த தரிசனம்

“ சிவ நாமமே சிறந்த நாமம் ” பகவானுக்குரிய பல நாமங்களிலும் சிவ நாமம் சிரேஷ்டமென்றோம். ‘ சிவம் ’ என்னும் பதம் மங்களத்தைக் குறிப்பதால் அந்த பதத்தை யடிக்கடி கூறுவோர் ஸந்தோஷ சுகங்களை யனுபவிப்பர். ஜென்மாந்தரத்தில் சிவபூஜை செய்தவர்கள் இந்த ஜன்மத்தில் நல்ல பத்நியோடும் ஸத்புத்திரர்களோடும் பசுக்களோடும் சுகிகளாய் வாழ்கின்றனர். எனவே, இந்த ஜன்மத்தில் ஈச்வரனை யாராதித்தால் ஸகல ஐச்வரியங்களையும் அநுபவிக்கத் தடையென்ன ? ஆகவே, சிவமூர்த்தியின் தெய்வானுக்கிரகம் கிடைக்கவேண்டி சிவசிவ என்று ஸதா தியானம் செய்யக்கடவோம்.

***

“ ஜகன்மோகினி” யாக அவதரித்து தேவர்களை ஸம்ரக்ஷித்த கரியமாலின் கருணையை வியந்து கொண்டாடுகிறோம். பகவான் பலவித அவதாரங்களை யெடுத்து பத்தர்களை யிரக்ஷித்திருக்கின்றார். உதாரணமாக, பிரகலாதனைக் காப்பாற்றும் நிமித்தம் நரஸிம்ஹாவதாரம் செய்தார். இவ்வவதாரம் வெகு கோரமானது. நரஸிம்ஹனைக் கண்டு எல்லோரும் பயந்து நடுங்கினார்கள். லக்ஷ்மிகூட அக்காலத்தில் தன்னுடைய நாயகனிடம் செல்ல அச்சங்கொண்டாள். இராமாவதாரம் எடுத்தபோது நீலமேக சியாமல வர்ணனாகத் தோன்றினாலும் அவருடைய கோதண்டமும், பாணங்களும் அரக்கர்கட்கு எமனை[illegible] விளங்கின. சத்துருக்[illegible]ளெல்லாம் கோதண்டராமனைக் கண்டு ந[illegible]கினார்கள். இவ்வித[illegible] [illegible]த்திலும் சக்கரத்தைக் கண்டு ஜனங்கள் பயந்தன[illegible] [illegible]செய்த பரசுராமனைப் போற்றுகிறவர் யார்? நாராயணன்

Ø211, N26 AG
N28 . 2 . 22
164832

பக்தி யில்லாதவன் மூடனே. வேண்டிய பொருளைப் புதைத்துவைத்து அன்னத்திற்குக் கஷ்டப்படுபவனைத் தரித்திரனென்று சொல்லத்தடை யென்ன ? கங்கைக் கருகே குடியிருந்தும் தாகத்தால் வருந்துபவன்போல், ஈசுவர நாமத்தின் உயர்நலத்தை அறியாதவனும் அதமனுகின்றான்.

***

" பக்தியாவது " தெய்வத்தை நம்புதலாம். குழந்தை தாயை நம்புவது போலவும், பத்தினி தன் கணவனை நம்புவது போலவும், பார்த்தபொருளைக் கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும் தெய்வத்தினிடம் பரிபூரணமான நம்பிக்கையைக்கொண்டு அவரை ஸதா தியானிப்பதற்கே பக்தி எனப்படும். இரவிலும் பகலிலும், இன்பத்திலும் துன்பத்திலும், தொழிலிலும் ஆட்டத்திலும், எப்போதும் இடைவிடாமல் நெஞ்சம் தெய்வ அருளைப் பற்றி நிற்கவேண்டும்.

***

" ஸ்வர்க்கம்—நரகம் " என்ற விவகாரம் உண்டா என்பது சிலருடைய கேள்வி. இவ்வுலகத்தில் குற்றமற்ற இன்பங்களை யனுபவிப்பதே ஸ்வர்க்க மென்றும், துன்பங்களை நுகர்வதே நரகமென்றும், இவ்விரண்டைத் தவிர வேறு விதமான ஸ்வர்க்கம் நரகம் என்பன ஆகாசத்திலும் பூமிக்குக் கீழும் கிடையா தென்றும் ஒரு மதஸ்தர் கூறுகின்றனர். மற்றும் சிலர் ஸ்வர்க்க நரக வியவகாரங்கள் வாஸ்தவத்தில் இல்லை யென்றும், பிராந்தியை யுடையவர்களுக்கே யுண்டென்றும், சகலமும் பிராந்தியினுல் விளைகின்றன வென்றும், உண்மையை விசாரித்தால் எல்லாம் பிரம்ம மென்றும் பேசுகின்றனர். புராணங்களில் ஸ்வர்க்க—நரகாதிகள் உண்டென்று வியக்தமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஸ்வர்க்க—நரக வியவகாரங்கள் புராணங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது உண்மை. புராணங்களை எழுதியவர்கள் மேதாவிகளான மகரிஷிகளன்றோ ? அவர்கள் கூற்று பொய்ப்படுமோ ? நம்முடைய நன்மைக்கே ஸ்வர்க்க நரகங்களிருப்பதாய் வியக்தமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். ஞானிகளுக்கு இந்த பயமில்லை. மாயையிலகப்பட்ட நமக்கு அந்த பயம் எப்போதும் இருக்கும். நாம் நல்வினைகளைச் செய்தால் ஸ்வர்க்கபலனையும், தீவினைகளைச் செய்தால் நரகத்தையும் அடைவோமென்பது நிச்சயம். ஸ்வர்க்கம்—நரகம் என்ற நினைவேயின்றி யாவற்றையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்துவிட்டு, அவர் எங்கு வைப்பினும் ஸம்மதமென்று அவரது நாமத்தையே ஸதா தியானித்து, அத்தியானத்திலேயே பரவசராகி, எப்போது பகவானைக் காண்பதோ என வாடுவோருக்கு மட்டுமே முக்தி சித்திப்பதாகும். இவ்வித நிலையில் " தான் " என்ற அகந்தை ஒழிந்து எங்கும் ஈசுவர ஸ்வரூபத்தையே ஜீவன் பார்க்கின்றது. இவ்விதமான பக்குவசித்தி நமக்கு உண்டாகுமாறு நாம் பகவானைப் பிரார்த்திக்கக்கடவோம்.

1928—ம் வருஷம்.

இப்புது வருஷத்தில் மனிதவர்க்கம் அன்பில் வாழவும், பரஸ்பரம் பிரேமையுடன் நேசிக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

ஆநந்த குணபோதினி

பிரபவஹு தைமீ 1வ

42—வது காங்கிரஸ் மகா சபை.

ஆர்வத்துடனும் எதிர் நோக்கிய **42**-வது காங்கிரஸ் மகாசபை சென்னையில்—காங்கிரஸ் நகரில் 26-12-1927-ம் தேதி பிற்பகல் இரண்டு மணிக்குக் கூடிற்று. ஆ! அன்று சென்னை யிருந்த நிலைமையை என்னென்போம். காங்கிரஸ் நகர் தேவலோகம் போன்றும் பிரகாஸித்தது.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா
கண்ணீரால் காத்தோம்.

என்றார் பாரதியார். அவ்வாறுகச் சென்ற **41**-வருஷங்களாகப் பாடுபட்டு வந்துள்ள ஒரு பெரிய தேசீய முயற்சியை இங்கிலாந்திலுள்ளவர்கள் அற்பமென்று சொல்லிவிட முடியாது. காலஞ் சென்ற தலைவர்கள் 1885-ம் வருஷத்தில் விதைத்த ஒரு சிறு விதையின் வைபவக் காட்சியிது. " காங்கிரஸ் நகர் " என்ற பெயரால் ஒரு தனி ஸ்தலமும், ஒரு தனி ரயில்வேஸ்டேஷனும் தந்தி-தபால் ஆபீசுகளும், காங்கிரஸ் ஸ்பேஷல் என்று ரயில் வண்டித் தொடர்களும்—இவைகளெல்லாம் காங்கிரஸின் பெயரையே கேட்டிராத குக்கிராம வாஸிகளுங்கூட அப்பெயரைத் தெரிந்துகொண்டு சொல்லும்படியாக அவர்களைத் தட்டி எழுப்பிவிட்டன. காங்கிரஸ் என்றால் என்ன என்று இனி ஒருவர் கற்பித்துக் கொடுக்கவேண்டாம். வரவேற்பு சபைத் தலைவர் ஸ்ரீமான் ஸி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுத் தமது வரவேற்புப் பிரஸங்கத்தைச் செய்தார்.

காங்கிரஸ் அக்கிராஸனரான டாக்டர் அன்சாரி அவர்களது பிரஸங்கம் கம்பீர வாக்காகவும், அர்த்த புஷ்டியாகவும், சாரசங்கிரகமாயு மிருந்தது. அவர் 25-ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் காங்கிரஸ் மகா சபைக்கு ஒரு கல்லூரி மாணவனின் நிலையில் வந்திருந்ததாயும், அப்போது தனக்கு இந்த மகத்தாகிய அக்கிராஸன மஹோன்னத பதவி ஒரு காலத்தில் இதே இடத்தில் கொடுக்கப்படப் போவதாகக் கனவிலும் கருதவில்லையென்றும் கூறினர்.

" இந்தியா தேசம் அன்னிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்று சுய ஆட்சி நடத்தும் நாடாக ஆகவேண்டுமென்பதும், இக்

நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸமூகமும் ஸமத்வமான உரிமையைப் பெற்று அதிக நியாயமாக உள்ள பாத்யதைகளெல்லாம் குறைவறப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதும், உள் நாட்டில் அமைதியும், வெளிநாடுகளில் சிநேக ஸம்பந்தமும் இந்தியாவுக்கு ஏற்படவேண்டுமென்பதும்—ஆகிய இவைகளே நமது ராஜீயக் கிளர்ச்சிகளின் முக்கியமான நோக்கங்கள் " என்றார்.

" பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து கொண்டே இந்த நமது லக்ஷ்யத்தை நாம் அடையக் கூடுமானால், அதை விட்டுப் பிரிந்து போக நாம் இஷ்டப்படவில்லை. ஆனால் நம்முடைய ராஜீய லக்ஷியத்தை அடைவதற்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தொடர்பானது நமக்கு இடைஞ்சலாக இருக்குமானால்—அத்தொடர்பை அறுத்துக்கொண்டுவிட நாம் சிறிதும் பின் வாங்க மாட்டோம் என்பது திண்ணம். மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளபடி " முடியுமானால் ஏகாதிபத்யத்திற்குள் ; அவசியமானால் அதற்கு வெளியே" என்பது தான் இந்த விஷயத்தில் நமது வழி முறை வாக்கியமாகும்"—என்றார்.

" (1) ஏகாதிபத்தியக் கொடுமைகள், (2) பெரும் பண வருவாய் படைத்த ஸமுதாயங்களால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள், ஆகிய இவையே நம்மைப் பெரிதும் பாதை படுத்தக் கூடியன " என்றார். அதைப் பின்னும் விளக்கிச் சொல்லுகிறார் :—

(1) " ஏகாதிபத்ய ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டாகவும், (2) விளைபொருள்கள் மலிந்த பிரதேசங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு அதன் மூலமாக ஐரோப்பாவிலுள்ள தொழிற் சாலைகளுக்குப் பிழைப்பு ஏற்படும்படி செய்வதற்காகவும், (3) அங்ஙனம் அத்தொழிற் சாலைகளில் தயாரிக்கப்பட்ட சாமான்களை ஏற்றமான விலைக்கு விற்பனை செய்து பணம் திரட்டக் கூடிய பிரத்தியேக மார்க்கட்டுகளை மேன்மேலும் பிடிப்பதற்காகவும், —ஆகிய காரணங்களை முன்னிட்டு எளிய தேசங்களுடைய சுதந்தரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அங்ஙனம் சுதந்திரம் இழந்த நாடுகள் பலவற்றைத் திரட்டி ஏகாதிபத்தியங்கள் அமைக்கப் படுகின்றன " என்றார்.

"ஜோஸப் சேம்பர்லேன் " என்பவரின் கூற்று :—ஏகாதிபத்யம் என்பது (ஒரு) வியாபாரம். இந்த வியாபாரத்தில் முக்கியமான, [illegible]ம் இழக்கத் தகாத வாடிக்கைக்காரன் இந்தியன்."

" ஏகாதிபத்யம் என்ற கட்டிடம் இந்தியா என்ற அஸ்திவாரக் கல்லின்மீது கட்டப்பட்டு நிற்கின்றது " என்றார்.

சென்ற 40-வருஷ காங்கிரஸ் இயக்கங்களில் 35-வருஷங்கள் ஒத்துழைத்துப் பார்த்தாய் விட்டதென்றும், ஒன்றரை வருஷ

காலம் ஒத்துழையாமையை அனுசரித்தானதென்றும், அதற்கும் பின் நான்கு வருஷங்களாக சட்டசபைக்குட் புகுந்து தடை வேலை செய்ய முயன்று பார்த்ததாய் விட்டதென்றும் கூறினார்.

யாருடைய பலம் பெரிதென்று போட்டிபோட்டுப் போராடுகின்ற போராட்டத்தில், போராடும் இருவருள் ஒருவனே தீர்ப்பு செய்கிறவனாகவும் இருந்துவிட்டால், மற்றவனுக்கு ஜெயம் கிடைக்குமென்ற நம்பிக்கை ஒரு நாளும் இல்லாததுபோலவே, சட்டசபைப் பிரவேசமும் நிஷ்பிரயோஜனமாய் முடிந்துவிட்டதென்றும் கூறினார்.

ஒத்துழையாமையினால் நாம் எதிர்பார்த்த அளவு பயன் கிடைக்கவில்லையாயினும், அது இயக்கத்தின் தோஷம் அல்லவென்றும், அதை வெற்றிபெற நடத்திவைக்காத குற்றம் நம்முடையதென்றும், ஒத்துழையாமை நம்மைத் தோல்வியுறச் செய்யவில்லை—நாமே நமது செய்கையால் அதனைத் தோற்கடித்தோம்—என்றும் புகன்றார்.

ஹா ! என்னே அருமை செறிந்த மொழிகள் !

ஹிந்துக்களும்முஸ்லிம்களும் இந்தியாவிலேயே வாழ்ந்து, இந்தியாவிலேயே மடியப்போகிற ஒருமித்த ஸகோதரர்களேன்றும், 7-கோடி முஸ்லிம்களைத் துறத்திவிட இந்தியரால் ஆகாதென்றும், அவ்விதமே 25-கோடி ஹிந்துக்களைத் தூரத்திவிட முஸ்லிம்களால் ஆகாதென்றும், இரண்டு ஸமூகங்களும் மூர்க்கத்தனமாக சண்டையிட்டுக் கொள்வதில் மூன்றாவது மனிதனுக்கே நன்மையென்றும், இதனால் நமது எதிரிகளின் பலம் அதிகரிக்குமென்பதை நாம் உணர்ந்தோமில்லையென்றும் நவின்றார். இன்னும் தெளிவாக அவர் சொல்லியதாவது :—

" அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று வெளியேற வேண்டுமென்று பாடுபடுகிற அடிமை ஜனங்கள் ஸமூகச் சண்டைகளில் ஒருநாளும் இறங்கக்கூடாது. சுதந்தரமும், ஸமூகவாதமும் ஒன்றுக்கொன்று முறண்பட்டவை. ஆதலின் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுப்பட்டு போகவேண்டு "மென்றும் வற்புறுத்தினார்.

காங்கிரஸ் பின்வருமாறு சமரசத்தை விதித்திருக்கின்றது.

1. நியாயபோதனைகள் மூலம் மதம் மாற்ற எவருக்கும் எந்த ஸமூகத்தினருக்கும் உரிமை உண்டு. ஆனால் வற்புறுத்தியோ, ஏமாற்றியோ, 18-வயதுக் குட்பட்டவர்களையோ, துராகிருதமாகவோ மதம் மாற்றல் கூடாது.

2. மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாய் மசூதியைத் தாண்டிச் செல்லலாம். ☞ ஆனால், மசூதியின் அருகில் நிறுத்தி வாசித்து ஜெபங்கட்கு விக்கினம் விளைக்கவொண்ணாது. விஷமப்பிரவர்த்தனை கூடாது.

3. பசுபலி செய்யலாம். ☞ ஆனால், ஹிந்துக்களின் மதஉணர்ச்சியைப் பாராட்டி மறைவிடங்களிலும், ஹிந்துக்களின் மனத்தைப் புண்படுத்தாத வழிகளிலும், அவ் விஷயத்தைப் பிறர் பார்வைக்குப் படாதபடி கொண்டுபோக வேண்டும்.

ஸமூக ஸ்தாபனங்கள் எப்போதும் குறுகிய நோக்குள்ளதாதலின், பொதுவாக மேலான திருஷ்டியுள்ள காங்கிரஸானது காட்டும் வழிகளைப் பின்பற்றி அந்தந்த ஜாதி மதஸ்தர்களும் தங்களின் ஸமூக—ராஜீய உரிமைகளை அடையப் பார்க்க வேண்டுமென்றும் சொன்னார்.

காங்கிரஸிலிருந்து விலகி நிற்பதிலிருந்தும் தங்கள் நன்மை பெருகுமென்று கிறிஸ்துவ ஸகோதரர்கள் நம்பினால், அது பூர்வம் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேராதிருந்து கண்ட பலனையே அவர்களும் அநுபவிக்க நேரும் என்றார். சட்ட சபைகளில் தமக்கு நம்பிக்கையில்லையென்று பரிஷ்காரமாகச் சொல்லிவிட்டார்.

ராயல் கமிஷனைப் பஹிஷ்கரித்தே தீரவேண்டுமென்றும், இந்தியாவில் ராஜீய முன்னேற்றம் ஏற்படுவதற்குரிய அளவையும் காலத்தையும் நிர்ணயிக்கும் அதிகாரம் தனக்குத்தான் இருப்பதாக இங்கிலாந்து கொண்டாடும் பாத்தியத்தை,—எந்தப் பகுத்தறிவுள்ள சுயமரியாதையுள்ள இந்தியனும் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ள மாட்டான்,—என்றும், நம்முடைய தேவைகளை அறிந்தவர்கள் நாமேயன்றிப் பிறரல்ல என்றும் சொன்னார்.

அக்கிராஸனரின் உபன்யாஸம் பொறுக்கி எடுத்துச் சேர்த்த நவரத்னங்களென்போம். எக்காலத்தும் ஓதக்கூடிய உயர்தனிச்செம் மொழிகளாகும். பூரண சுயேச்சையே இந்திய மகா ஜனங்களின் லக்ஷியம் என்பதை விளக்கி சுதந்திரத் தீர்மானம் நிறைவேற்றினர். இந்திய—பர்மா பிரிவினையைக் கண்டனம் செய்து ஒரு தீர்மானம். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைத் தீர்மானம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேறிற்று. இன்னும் பல தீர்மானங்களும் செய்யப்பட்டன. சென்னைக் காங்கிரஸ் மகா மேன்மையுடனும், மிக்க வைபவமாயும் பூர்த்தி பெற்றது. அடுத்த காங்கிரஸ் கல்கத்தாவிற்கு அழைக்கப்பட்டிருக்கிறதென அறிகிறோம். காங்கிரஸ் என்ற நாமம் இம்முறை தமிழ் நாட்டினரின் மனத்தில் நன்கு பதிவு செய்யப்பட்டு விட்டதென்பது திண்ணம். காங்கிரஸ் வாழ்க. பாரதமாதா வாழ்க. வந்தே மாதரம்!

அவன் பேசுகிற சிடுசிடுப்பையும், குத்து வார்த்தையையும் பார்த்தால் இப்படியே குடும்பத்துடன் எரிந்து போகானு என்று தோன்றுகிறது. ஆனால் அந்தப் பாவியோ வெகு நல்ல நிலைமையிலேயே இருக்கிறான்.

பிரபஞ்ச நவீனங்கள்

1. சில அபூர்வ புஸ்தகங்கள் :—

ஸாதாரணமாக இக்காலத்தில் நாம் எழுதுவதெல்லாம் காகிதத்திலேதான். சுமார் நானூறு வருடங்களுக்குமுன் இங்கிலாந்தில் காக்ஸ்டன் (Caxton) என்பவரால் காகிதம் எழுதுவதற்கும் அச்சிடப்படுவதற்கும் ஸாதாரண உபயோகத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் காகிதத்தை முதலில் கண்டு பிடித்தவர்கள் சீனர்களே. சுமார் ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்கு முன் சீனர்களால் எழுதப்பட்ட காகித புஸ்தகங்கள் சீனாவின் பெரிய சுவரினின்றிருந்து அகப்பட்டிருக்கின்றன. நமதுதேசத்தில் சிலாசாஸனங்களும், தாம்பிரத்தகடுகளும் வரவர நாகரீகம் முதிர ஏட்டுச் சுவடிகளும் காகிதம் வருவதற்கு முன் கையாண்டுவரப்பட்டன. கண்டிராஜன் புழலேரியின் கவர்னருக்கு தூது அனுப்பினபொழுது தங்க ஏடுகளால் செய்யப்பட்ட ஒரு புஸ்தகத்தில் ராஜாங்க விஷயங்களை வரைந்து அனுப்பினார். இடாலி தேசத்தில் ரோம் என்னும் ரோமாபுரியில் சலவைக்கல் புஸ்தகம் ஒன்று இருக்கிறது. அதன் பக்கங்கள் மெல்லிய சலவைக் கல்லால் செய்யப்பட்டு நன்றாய் திருப்பிப் படிக்கும்படியாய் இருக்கிறதாம். அதே ஊரில் மற்றொரு புஸ்தகம் ஈயத்தகடுகளால் செய்யப்பட்டு நாலு அங்குல நீளமும் மூன்று அங்குல அகலமும் உள்ளதாயிருக்கிறதாம். கிரீஸ் என்னும் கிரேக்க தேசத்தின் சட்டங்களையெல்லாம் பண்டைய காலத்தில் பித்தளை தகடுகளிலும், ரோமர்களின் ராஜ்யத்தில் தந்தத் தகடுகளிலும் வரையப்பட்டிருந்ததுவாம். பண்டைய காலத்து அயோனியர்கள் தங்களுடைய ஸர்க்கார் விஷயங்களை எல்லாம் ஆடுகளின் தோல்களில் எழுதிவைத் திருந்தார்களாம். கான்ஸ்டாண்டி நோபில் நகரத்து புஸ்தகச் சாலையில் ஒரு அபூர்வ புஸ்தகம் இருக்கிறது. அதாவது ஹோமர் என்னும் மகா கவியின் இலியட் என்றும் ஒடிஸ்ஸி என்றும் சொல்லப்படுகிற காவியங்கள். இந்தகாவியங்களை ஒரு இறந்துபோன ஸர்ப்பத்தின் உலர்ந்த குடலில் எழுதப்பட்டு இருக்கிறதாம்.

2. பற்களின் வகை :—

மானிட ஜாதியைப் போலவே குரங்குகளுக்கும் முப்பத்திரண்டு பற்களாம். முலைப்பால் கொடுத்து ஊட்டும் எல்லா மிருக ஜாதிகளுக்

வேலைக்காரர்கள் தங்கள் வீட்டுக்குப் போகும் சமயம் வேலைகளை முடி... ...ம் சுறுசுறுப்பில் நான் முழுதும் வேலைசெய்திருந்தால், எவ்வளவோ அதி... வேலைகள் நடந்திருக்கும் என்கிறார் ஒரு ஆபீஸ் மானேஜர்.

கும் ஸாதாரணமாக ஏறக்குறைய 32-பற்கள்தானும். ஆனால் எலி மூஞ்சுவர், பெரிருசாளி முதலியவைகளுக்கு இருபது பற்களாம். முயற்களுக்கு இருபத்தெட்டு பற்களாம். டால்ப்வின் என்னும் மீனிற்கு இருநூறு பற்களாம். தோட்டங்களில்வசிக்கும் ஸாதாரண நத்தை (Snail) களுக்கு ஆயிரத்து நாநூறு பற்களாம்!

3. **கார்க்குகள்:—**

நமது உலகில் உபயோகப்படும் குப்பிகளுக்கு மூடிகள் கார்க் என்னும் ஒருவகை மரத்திலிருந்து எடுக்கப்படுகிறது. இம்மரங்கள் பெரும்பான்மையும் அல்ஜீரியா (Algeria) தேசத்தில் பயிராக்கப் படுகின்றன. சுமார் இருபத்தைந்து லக்ஷம் ஏக்கர்கள் இம்மரங்கள் தானும்.

4. **கரையான்:—**

கரையான் என்று சொல்லப்படும் வெள்ளை எறும்புகள் சாதாரணமாக மாதத்திற்கு எண்பதினாயிரம் முட்டைகள் விகிதம் இடுமாம்.

5. **ஆங்கில மாதங்கள்:—**

ஆங்கில வருஷத்தின் கடைசி நாலுமாதங்களுக்கும் தப்புப்பெயரிடப்பட்டிருக்கிறது. ஸெப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிஸம்பர், என்பவைகளுக்கு முறையே, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது மாதம் என்று அர்த்தம். ஆனால் வழக்கத்தில் முறையே ஒன்பதாவது, பத்தாவது, பதினொன்றாவது, பன்னிரண்டாவது, மாதங்களாக விளங்குகின்றன. இந்த தப்பு எண்ணிற்கு காரணம் முதலில் வருஷங்களெல்லாம் மார்ச்சுமாதத்திலிருந்து கணக்கெடுக்கப்பட்டுவந்தன. இப்பொழுது ஜனவரியிலிருந்து கணக்காகின்றது. இந்த நாலுமாதங்களின் பெயர்கள் எண்ணிக்கையிலிருந்து காரணப் பெயர்களாய் ஏற்பட்டன. ரோமர்களின் கடவுளாகிய 'ஜானஸ்' என்னும் தேவதையிலிருந்து ஜான்யுயரி என்ற ஜனவரி மாதமும், மாயியா என்னும் தேவதையின் பெயரிலிருந்து மே மாதமும், ஜூனோ (Juno) என்னும் தேவதையின் பெயரிலிருந்து ஜூன் மாதமும், மார்ஸ் என்னும் யுத்த தேவதையின் பெயரிலிருந்து மார்ச்சு மாதமும், பிப்ருவா (Bebrua) என்னும் ரோமர்களின் புண்யாகவசன பண்டிகையிலிருந்து பிப்ரவரி மாதமும், ரோமர்களின் வஸந்த காலத் திறவு கோலாகிய மாதத்திற்கு அவர்கள் பாஷையில் திறவு கோல் என்று அர்த்தமாகும் ஏப்பிரல் மாதமும்ரோமர்களின் கீர்த்தி

உனக்கு முன் நடந்து போன சம்பவங்களை நீ மறுபடியும் நினைப்பதே பெரிய படிப்பு. தினமும் நடக்கும் சங்கதிகளைக் குறிப்பிட்டு எழுதி வந்தால் பிறகு ஆனந்த குணபோதினிக்கு அதை அனுப்பலாம்.

பெற்ற சக்ரவர்த்திகளாகிய ஜூலியஸ் ஸீஸர், அகஸ்டஸ் ஸீஸர் என்பவர்களின் ஞாபகார்த்தமாக முறையே ஜூலை, ஆகஸ்ட் மாதங்களும் பெயரிடப்பட்டன.

6. **ஆகாரமின்றி இருத்தல்:—**

ஸாதாரணமாக மனிதர்களால் அன்னாகாரமில்லாமல் பத்து நாள்களிற்கு மேல் ஜீவித்திருப்பது கஷ்டம், மஹான்களாகிய காந்தியடிகள் முதலியவர்களால்தான் ஜாஸ்தி நாள்கள் பழகப் பழக பட்டினிகிடந்து ஜீவித்திருக்க முடியும். மூட்டு பூச்சிகளை எந்த விஷத்திராவகத்தில் போட்டாலும்கூட மூன்று நாள் வரையில் மூச்சை யடக்கிக்கொண்டு ஜீவித்திருக்கும். ஸர்ப்பங்கள் ஸாதாரணமாக இரண்டு வருஷம் வரையில் ஆகாரமில்லாமல் ஜீவித்திருக்குமாம். தவளைகள் பதினாறு மாதங்கள் ஜீவித்திருக்குமாம். மரங்கள் கற்கள் இவைகளுக்குள் உட்கார்ந்துக்கொண்டு அன்னாகாரமில்லாமல் பத்து வருஷங்கள் வரையில் தேரை (Toad) ஜீவித்திருக்குமாம்!

7. **புதிய நேத்திரம்:—**

இதுவரையில் கடைஸாமான்களில் நல்லது கெட்டதை பொறுக்கி எடுக்க நமது நேத்திரங்களை உபயோகப் படுத்தி வருகிறோம். வியாபார விஷயங்களில் அநேக வித 'நேத்திரங்கள்' உபயோகப்பட்டுவருகின்றன. புகையிலை சுருட்டு முதலிய வியாபாரத்தில் 'புகைப்படமின்சாரக் கண்' (Photo electric eye) என்று ஒரு கருவியை உபயோகப்படுத்துகிறார்கள். இக்கருவி பார்வைக்கு ஒரு போட்டோ பெட்டி (Camera) மாதிரி யிருக்குமாம் இதற்குள் ஒருவித மின்சார பாட்டரி வைக்கப்பட்டிருக்குமாம். இந்த கருவியின் உதவியால் புகையிலையின் பழுப்பு வர்ணத்தில் சுமார் முப்பது தினுசு பழுப்பு வர்ணத்தை பிரித்து காண்பிப்பதால் தினுஸுக்கு தகுந்தது போல் விலையேற்படுத்தி விற்பனையாகிறதாம்.

S. A. ஸ்ரீநிவாஸ ஸர்மா.

வயிற்றின் கொடுமை!

வேலை செய்துகொண்டிருக்கையிலேயே இன்னும் முடியவில்லையா என்று கோபித்துச் சிடு சிடு என்று படும் எஜமானனின்மீது வேலைக்காரனுக்கோ குமாஸ்தாவுக்கோ வெகு கோபம் அந்த சமயம் வருகிறது. ஆனால் கோபித்தால் வேலை போய் தன் பிழைப்பு கெடுமே யென்று சகிப்புடன் மௌனமாயிருக்க வைத்துவிடுகிறது. அந்த மௌனம் வயிற்றின் கொடுமையால்!

சிறுமணித்திரள்

(406—ம் பக்கத் தொடர்ச்சி)

மகாத்மாவின் பொன்னுரைகள்.

344. இம்மண்ணுலகில் உள்ள எந்த உயிரையும் விடத் தன்னைச் சிறந்தவனென்று ஒருபோதும் கருதாதவனும், இகலோக சுகங்களை விட்டொழித்தவனுமே ஸந்யாசி. (புனிதமான மனிதன்.)

345. இன்றைக்கு ஹிந்துவின் கை முகம்மதியர் தொண்டையிலும், முகம்மதியர்கள் தங்களது கை ஹிந்துக்களின் தொண்டைமீதும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். (இது "தமிழ் இந்தியா"வி லல்ல.)

346. முதலில்உங்களை 'சேவை'க்குச் சிறந்த சாதனமாக்கிக் கொள்ளுங்கள். தூய்மையான மனத்துடன் சேவை செய்ய ஆரம்பிக்கா விட்டால் எந்த வாலிபரும் சரி, சிறுமியரும் சரி சமூகத்திற்குச் சேவையே செய்ய முடியாது. தூய்மையான மனமுடையவர்களாக இருக்க வேண்டுமென்று கூறிவிடுவது சுலபம். அதை சாதித்து அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதுதான் கஷ்டம்.

347. ஒரு அறியாக் குழந்தை எவ்வாறு ஒருவருக்கு மனைவியாகப் போகச் சம்மதம் கொடுக்க முடியும்? அப்படிச் சம்மதம் கொடுக்காமல் கலியாணம் செய்து கொடுக்கப்பட்ட குழந்தை எப்படி மனைவியாகும்? அறியாக் குழந்தையைக் கலியாணம் செய்து கொண்டவன் இறந்து விட்டால், அக்குழந்தை எவ்வாறு விதவையாக முடியும்? ஆகையால் "குழந்தை விதவை" யென்ற சொற்றொடரே தவறானதாகும்.

348. கல்யாணத்திற்கு யோக்கியதையும், பரஸ்பர அன்புமே உரிய சோதனைகளாக இருக்கவேண்டும்.

349. பிராமணர்களிடம் சண்டை செய்யுங்கள். ஆனால் பிராமண தருமத்தினிடம் சண்டை செய்யாதீர்கள். அதனைப் பங்கப் படுத்தாதீர்கள்.

350. பிறப்பினால்ஒருவன் உயர்வு மற்றொருவன் தாழ்வுஎன்பதில்லை என்பதுதான் என் கொள்கை. இக்கொள்கையை வழிபற்றியே நான் நடந்து வருபவன். பிறப்பினாலோ அல்லது ஸம்பாத்தியத்தினாலோ ஒருவன் உயர்வாகக் கருதப்பட முடியாது.

351. வர்ணாச்சிரமதர்மம் என்றால் தாழ்மை அடக்கம் என்பது பொருள். பிறப்பில் அவரவர்கள் தத்தம் பெற்றோர்களின் உருவங்களை அடைவது போல் குணங்களையும் அடைகிறார்கள்:

352. உலகத்திலுள்ள பெரிய மனிதர்கள் அந்த ஸ்திதிக்கு எவ்வாறு வந்தார்கள் என்பதை நீங்கள் உற்று நோக்கினால், அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வெளியே பெற்ற அனுபவத்தினால் தான் என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள்.

353. ஹிந்துவானாலும், கிறிஸ்தவரானாலும், பார்சியானாலும், முகம்மதியரானாலும் சுத்தமான உணவு கொடுத்தால் அவரிடம் நான் உண்பேன்.

354. நம்முன்னோர்களான ரிஷிகள் கடவுளுக்குத் தொண்டுசெய்து மனிதனுக்குப் பணிசெய்து தம் வாழ்வை நடத்தியது நம்மால் கவனிக்கத்தக்கது.

355. அஸ்திவாரத்தின் மேலிருக்கும் சேறுகளையும் அழுக்குகளையும் போக்க முயற்சியுங்கள். ஆனால் அஸ்திவாரத்தைப் பெயர்த்துவிடாதீர்கள். வழக்கம் வழக்கம் என்ற அசாக் கொள்கைகளை அழிக்க முயலுங்கள்.

—மகாத்மா.

356. தன் தன் ஆத்மாவை ஒவ்வொருவனும் பரிசுத்தப் படுத்தினால் தானும், தன்வழியாகத் தன் ஸமூகமும் முன்னேற்றமடைய ஹேதுவாகும். ஆத்மா எந்த ரூபத்தையடைகிறதோ அந்த குணத்திற் கேற்ற உருவமே வெளியில் அமைகிறது.

357. முளைக்கும் சக்தியையுடைய விதை பூமியில் மறைந்த பின்னர் எங்ஙனம் முளைத்து வருகின்றதோ, அங்ஙனமே ஜீவ சக்தியுள்ள மனிதர்களும் ஸமூகமும் வளர்ந்து வருகின்றன. ஜீவனில்லா விதை அழுகிப் போவதுபோலவே, ஜீவனில்லா ஸமூகமும் க்ஷீணித்துவரும் இயல்புடையது.

358. மனிதனிலுள்ள மிருகத் தன்மையை நாம் வளர்த்துக்கொண்டு போகாமல், மனதை அடக்கி உண்மை அறிவைப் பெறுவோமாக.

—ரவீந்திரநாதர்.

359. கடவுளை நம்பிக்கொண்டு அவர் கருணையைப் பிரார்த்தித்துக் கொண்டு,பிறமனிதர்களை அவர்களும் அதே கடவுளின் சிருஷ்டி என்று நினைக்காத படியால், மதம் தணிந்து, சுய நலம் பெருத்து உலகம் வருந்துகிறது.

360. எந்நாட்டிலும் விஷயம் அறிந்தவர்கள் சொற்பப்பேர்கள்தான்

361. உங்கள் கோபத்தால் உங்கள் பார்வைக்குக் குறைந்திருக்கும் நிலையில் ஏற்படும் விரோதத்தை முன்னிட்டு நாட்டின் செல்வமாகிய மதம் அறிவு, தர்மம் முதலியவற்றை மிதித்துத் தொலைத்துவிடாதீர்கள். இந்து தர்மமாகும் கொட்டையின்மீது இருக்கும் உமியைப் போக்குவதற்குப் பதிலாக, கொட்டையிலுள்ள பருப்பாம் ஜீவதாதுவையே நாசம்செய்து விடாதீர்கள். அவசரத்தால் அதன் முக்கியத்தை மறந்து விடாதீர்கள்.

362. பிரிட்டிஷ்கயானா 12000-மைல் தூரத்திலுள்ளது. அங்கு 30-வருஷங்களுக்கு முன் பிழைக்கச் சென்று இப்போது திரும்பிய இந்தியர்களிடம் காலணாவுக்கும் வழியில்லையாம்.

363. என்னுடைய மனதில் உள்ளவைகளை ஒன்றையும் மறைக்காமல் பேசினதினால் என்னுடைய மனதுக்குக் கொஞ்சம் சாந்தம் ஏற்பட்டது. என்னுடைய துக்கத்தில் நீங்கள் பாகம் எடுத்துக் கொண்டு என் தோள்மேல் இருக்கும் பாரத்தைக் குறைத்து, என்னுடைய உபதேசங்களைப் பின்பற்றும் பக்ஷத்தில் எனக்குத் திருப்தியாய் இருக்கும்.

—மகாத்மா.

கூப்பிட்டவுடன் சாப்பிட இசையாதவர்களைத்தான் வருந்தி வருந்தி அழைப்பது. சாப்பிடக் காத்திருப்போரையோ சாப்பாட்டு சமயத்தில் வந்துவிடுவீரே என்று நினைப்பது ;

364. மிஷனரிகள் நமக்குப் பரலோகத்தில் நற்கதியில்லை யென்கிறார்கள். விவிலியன்களான மகான்களோ நமக்கு இந்த லோகத்தில் ஒன்றும் அளிப்பதில்லை. ஆகவே, இவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட நமக்கு இரண்டு உலகங்களிலும் நற்கதியில்லை யென்று ஏற்படுகிறது.

—ஸ்ரீ. இ. எல். ஐயர்.

365. பார்லிமெண்டில் இந்திய விஷயங்கள் விவாதத்திற்கு வரும்போது சபை காலியாகி விடுகிறது. அவர்கள்தான் நமது நன்மையை ஸதா கோருகிற வர்களாம்.

—ஸ்ரீ. இ. எல். ஐயர்.

366. இக்கொந்தளிப்பான காலத்தில் மெதுவாக முன்னேறிச் செல்வதைக் கொண்டு திருப்தியடைவதென்பது தற்கொலைக்கு சமமாகும்.

—மகாத்மா.

367. அழகு தூய நடத்தையில் இருக்கிற தேயன்றி, ஆபரணங்களை யணிவதில் இல்லை. —மகாத்மா.

(தொடரும்.)

உத்தமர் சிந்தையின் உயர்வு.

எல்லோரும் இன்புற்று இருக்கவேண்டுமென்று நினைப்பவன் தானும் சுகவாழ்விலேயே இருப்பான். பிறருக்கு ஸதா பலவகையிலும் உதவி புரியும் மனது கொண்டவன் தன் மனதில் எவ்விதக் குறைவுமின்றி வாழ்வான். அவன் நெஞ்சு சமாதானமாய் இருக்கவேண்டுமே யென்று கடவுள் அவனைப்பற்றி வெகு சிரத்தையோடும் கவனித்த, அவனது நல்ல உள்ளத்துக்கு எல்லாம் நன்மையாகவே பொருந்தும்படி அருள்புரிந்து கொண்டிருக்கிறார். இத்தகையோரில் எத்தனை பெயரை நீ பார்த்திருக்கிறாய்?

தான் பெற்ற கல்வியைக் குறைவாக எண்ணுபவனே மேன்மேலும் ஆராய்ந்து இன்னும் உயருகிறான். எல்லாம் தெரிந்துவிட்ட தென்போன் உள்ள படிப்பையும் மறப்பதோடு கர்வமும் வேறே!

உனக்குப் பிரியமில்லாத ஒரு நல்ல காரித்தை மற்றவர் செய்துகொண்டு போகவிட்டுவிடுவதே பெரியமனிதத்தன்மை. நீ இடையே புகுந்து கெடுக்கப் பார்ப்பது உன் பெரிய தன்மைக்குச் சரியல்ல.

100 டைம் பீஸ்கள்

இனாம்

எப்படி இனாம்?—எவ்விதம் இனாம்?—எனில் சொல்லுகிறோம். நமது பத்திரிகைக்குள்ள பதினாயிரம் சந்தாதாரர்களில் எவரேவர் இனி வரப்போகும் புதுவருஷத்தின் சந்தாவான ரூபாய் ஒன்றையும் முன்னதாக 1928-மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குள் மணியாடர் மூலம் நமக்கு அனுப்பிவிடுகின்றனரோ, அவர்களுக்கெல்லாம் தொடர்ச்சியான நெம்பர்கொடுத்துப் பதிவு செய்து வருவோம்.

சித்திரை மாதம் முதல் தேதியில் இப்பதிவு செய்துள்ள பெயர்களைச் சேர்த்து சீட்டு குலுக்கிப்போட்டு, அவற்றில் 100 சீட்டுகளை எடுத்து அவற்றில் குறிப்பிட்டவர்களுக்கெல்லாம் புது வருஷக் கொண்டாட்டத்திற்காக ஒரு டைம்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும்.

31-3-1928-க்குள் புது வருஷ சந்தாவை மணியாடர் செய்துவிடுவோருக்கு விபவ வருஷத்திய ஆநந்த குணபோதினி பஞ்சாங்கம் இனாமாகக் கொடுக்கப்படுவதுடன், அதிர்ஷ்டவசமிருந்தால் ஒரு டைம்பீஸையும் வெகுமதியாகப் பெற்றுக்கொள்ளலாம். அந்தப் பாக்கியசாலிகளில் தாங்களும் ஒருவராக இருக்கக்கூடுமாதலின் இந்த நற்சமயத்தைக் கைவிடாமல் சொல்ப சந்தாவான ரூபாய் ஒன்றையும் உடனே மணியாடர் செய்து தங்களின் பெயரைப் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறோம். எத்தனை பத்திரிகைகளுக்கடியில் "ஆநந்த குணபோதினி"யைப் போட்டாலும், அதையே சிறந்ததென்று தேடி எடுத்துப் படிக்கப் பிரியப்படுவதையும், அத்துடன் வந்த மற்றப் பத்திரிகைகள் இன்னும் பிரிக்கப்படாமல், அப்படியே கிடக்க, "ஆநந்த குணபோதினி"யை மட்டும் வெகு ஆவலுடன் கடைசிவரையும் வாசிப்பதையும் நாளைக்கும் பல இடங்களில் பார்க்கிறோம். அத்தகைய உன்னதம் வாய்ந்த தனக்கு நிகரே இல்லாத அநுபவ மணியான "ஆநந்த குணபோதினி"க்கு, அதன் புது வருஷ சந்தாவை உடனே மணியாடர் செய்து நற்பரிசுகளைக் கைக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பத்திராசிரியர்.

வெறுத்தமனதை யடக்கி மேலுக்கு விருப்பாகவே பேச முயல்வது ஒரு கஷ்டமான சுமைதூக்கிவேலை. அதுவெளியில் தெரிந்தும் போகிறது?

அநுபவ முறைகள்

1. மோருடன் நெல்லிக்காய்களுடைய சாற்றை உபயோகித்தால் இரத்த மூலநோய் தீரும்.
2. நெல்லித்துளை பாலில் நன்றாகக் கொதிக்கவைத்து அதில் கொஞ்சம் நெய் சேர்த்து உருண்டைகள் செய்து தவலைக்குள் வைத்துக்கொண் டிருந்தால் இருமல் குறையும்.
3. நெல்லிக்காய்களை நெய்யில் வறுத்து மிருதுவாக அரைத்து தலையில் பூசினால் மூக்கிலுண்டாகும் இரத்த பித்தம், தலையிலுண்டாகும் எரிச்சல், தலைநோய்கள், கண்ணெரிச்சல் இவைகுறையும். மூளைக்கு நல்ல சக்தியை யுண்டாக்கும்.
4. மூத்திரத்தில் இரத்தம் போகும் பொழுது நெல்லிச் சாற்றில் கொஞ்சம்தேன்சேர்த்துஉபயோகித்தல் மிகவும் ஹிதமானது.
5. உள்ளங்கால் உள்ளங்கை எரிச்சலுள்ளோருக்கு நெல்லிக்காயை அரைத்துப் பூசுதல் நலம் செய்யும்.
6. மதுமேகங்களும்,நீர்வியாதிகளும் உள்ளோர் நெல்லிக்காயைப் புசித்தால் எப்பொழுதும் ஹிதமுண்டுபண்ணும்.
7. தேன் ஒருதுலம், நல்ல குளிர்ந்த தண்ணீர் மூன்றுதுலம், இரண்டையும் சேர்த்துத் தினந்தோறும் காலைவேளைகளில் உட்கொள்ளுதல் மிகவும் பருத்துள்ளவர்களுக்கும், இளைத்துள்ளவர்களுக்கும் மிக்க நன்மையை விளைவிக்கும். கொழுப்பைக் குறைக்கும் ; ரத்தத்தைச் சுத்தப் படுத்தும்.
8. தினந்தோறும் காலையில் தூங்கி எழுந்தவுடனேகுளிர்ந்த தண்ணீரை கிரமமாக காலாழாக்கு முதல் கால்படிக்குமேல் வரையில் அதிகப்படுத்திப் பருகுவதால் மலபந்தம், அஜீர்ணம் இவை நிவர்த்தியாகும்.
9. இலவம்பிசின் சூரணத்தையாவது, அரக்கின் தூளையாவது 5-குண்டுமணி யெடை நெய்யுடன் கொடுத்தால் வாயிலிருந்து ரத்தம் விழுவதும், மூலவியாதியினு லுண்டாகும் இரத்தப் பெருக்கலும் குறையும்.
10. வெள்ளைச்சிவதை விரேசனமுண்டாக்கும் ஔஷதங்களில் உத்தமமானது. இதின் உட்கொள்ளும் அளவானது 2-குண்டுமணி முதல் 20-குண்டுமணி யெடைவரை. தேன் அல்லது சக்கரையுடன் உட் கொள்வது நல்லது. குழந்தைகள், கிழவர்கள், கர்ப்பிணிகள் முதலிய எல்லோரும்உபயோகிக்கலாம். விகாரத்தையும் அரோசியையும் உண்டாக்காது. உருசியா யிருக்கும்.
11. மூத்திரமானது துளித்துளியாய் வரும் பொழுதாவது, அல்லது தடைப்பட்டுக் கொஞ்சமும் வெளிவராத பொழுதாவது அருகம்புல்வேர் கஷாயத்தை யுட்கொள்ள வேண்டும்.

(தொடரும்.)

ஆரம்பப் பழக்கத்தில் அடிக்கடி கடிதங்கள், சந்திப்புகள்! அன்பும் வெகு உயரப்போகிறது ; பிறகோ எல்லாம் கீழே இறங்குகிறது ? உறுதி நெஞ்சற்ற நிலரது போக்கு இது.

ஹாஸ்ய ஸஞ்சீவினி

ரயிலில் வைதீகர் ஸம்பாஷணை :—

வைதீகர் :—தேவர் இன்னு ராஜகீய வியாபாரத்தி லிருக்கிறதோ? ரொம்ப நாளாச்சு, தண்டம் தண்டம். பாங்கா? உமக்கு அந்த கிராமக் குழந்தையை வாங்கியிருக்குதோ? நாமம்—திருக்குடந்தை ஆராவமுது தங்கை அம்மச்சி குழந்தை தானே? போகட்டும், ஸந்தோஷம். இந்த ராஜகீய உத்தியோகத்திலே ஸம்பாவனை என்ன கிடைக்குமோ மாசத்திலே ?

நாகசாமி :—க்ஷேமந்தான், பதினறு ரூபா சம்பளம்.

வைதீகர் :—சோடச ரூபியமா ? இப்போது என்னவோ வைச்சிக் கொண்டிருக்குதே அதென்னது ?

நாகசாமி :—ஸ்வாமி, அது "வாச்சு" என்று சொல்லுவா.

வைதீகர் :—ஓஹோ ! சரி, இது என்ன நாழிகைகளைக் காட்டிக் கொண்டு வருதோ ? உருவம் ரொம்ப சொல்பம். இதனுள்ளே மனுஷன் இருப்பதற்குங் கூடவிடமில்லையே ? எப்படி ஸ்வாமி இதிலே சப்தம் உண்டாகின்றது? இப்போ சரீரத்திலே இந்தச் சொக்காய் கவசதாரணம் என்னவோ? இதென்னே தலையில் வச்சிருக்குதே? இதெல்லாம் இருந்தால் தான்இராஜகீய உத்தியோகத்துக்கு அழகோ ? இஸ்ச் ! அடடா ! காலம் கெட்டுப்போச்சு! தேவர் அண்ணு உண்டே, கிராமாந்தம், அத்திருஹணம் பண்ணவர், அடடா நல்ல ஹோதா, மஹான், தேவர் என்னவோ இப்படியெல்லாம் இருக்குது. தேவர் குமாரர்கூட ஹூண வித்யாப்யாஸம்தானே? என்னவோ கோ மாமிசபுக்குகளின் நீச்சவித்தையை! முன்னெல்லம் புறப்பட்டா பத்துநாள் செல்லுமே க்ஷேத்திரம் சேருதற்கு ! இப்போ காலமே புறப்பட்டா மத்யானம் ! இது இந்த தூம வியாப்தியினுல் தானே இந்த சகடம் போறது ?

***

கடிதச் சமர்த்து :—

சீனு :—வெகு பிரியமாக சம்பளம் வந்ததும் பத்து ரூபா அனுப்புவதாக எழுதினுயே, ஏது அவ்வளவு தயாள சிந்தை ?

வேணு :—நமது கடிதம் ஆரம்பத்தில் இனிப்பாக இப்படிப்போகட்டும் பிறகு அனுப்பச் சரிப்படாததற்கு வருந்துவதாய்ப் பக்குவமாக ஒரு கடிதம் எழுதிவிடுவோம்.

***

மனைவியின் பதில் :—

கணவன் :—என்னழகியே! ஏன் வீணுய்ப் பதியின் பிரியத்தைப் பெருவிருதமிருந்து தாமரை இதழ்போன்ற உடலை உலர்த்துகிருய் ? நீ யாருடைய தயையை வேண்டுகிருயோ, அவன் நீ கண்ணெடுத்துப் பார்த்தால் போதுமென்று உன் அடிமையாய்க் கிடக்கிருனே !

மனைவி :— தங்களின் தாசிவீட்டுச் சகவாசம் இவ்வளவு சாதுரியமாய்ப் பேசக் கற்றுக்கொடுத்ததோ? பேச்சுப்படி காரியமும் இருந்தால் உங்கள் மனம் திரும்பும்படி நான் தெய்வப் பிரார்த்தனை செய்யும்படி யிராதே.

***

வீட்டு நிலை :—

கந்தன் :—ஜானகிராமா! உன் பெயரில் உள்ள நாயக நாயகி ஒற்றுமை உன் வீட்டிலும் உண்டா?

ஜானகிராமன் :—

எத்தனை உழைத்தும் எவ்வினை புரிந்தும்
பத்தினி மனதில் பக்ஷமதில்லை!
வீணுக் குழைத்து வேசற லின்றி
மாணியா யிருந்து மாண்புற்றேனே? (மாணி-பிரம்மச்சாரி)

***

குமாரனது பதில்:—

தாயார் :—மகனே, உன்னைப் பத்துமாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டி சீராட்டிவளர்த்த என்னை மறந்து பெண்டாட்டியே பெரியவள் என்று எண்ணுகிறாயே. அவள் சொற்படி நடப்பது உனக்குத் தர்மமா? என்னை அலக்ஷியம் செய்வது நியாயமா?

மகன் :—அம்மா, என்னை ஈன்ற நீ கவலைப்படும்படி நான் நடக்கவில்லை, உன்னைத் தெய்வத்தைப் போல் பாவித்துப் போற்றுகிறேன். கிருக கிருத்யங்களைச் செய்யவே மனைவி ஏற்பட்டிருக்கிறாள். அவள் செய்யவேண்டிய தொழிலை வயதுசென்ற நீ செய்து சிரமப்படுவானேன்? நீ ஸதா என்னுடைய க்ஷேமத்தைக் கோரி பகவானைத் தியானம் செய். குடும்பத்தைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம்.

தமக்கை :—அடே தம்பி, நீ சொல்வது விவேகமல்ல. உனக்கு மூத்தவள் நான். என் சொல்லைக் கேள். நேற்று வந்த சிறுக்கிக்கு அதிகாரம் கொடாதே. அவள் எங்களை அலக்ஷியம் செய்யத் தொடங்குவாள். உனக்கு ஸ்திரீகளின் நீலித்தனமும் கபட குணமும் தெரியாது.

தம்பி :—அக்கா! உன்னுடைய அபிப்பிராயம் சிலாக்கியமாயத் தோன்றவில்லை. நீ சொல்லுவது உன்னுடைய அனுபோகத்தினாலெனில், நான் வெட்கமும் துக்கமும் கொள்வேன். உன் மாமனார், மாமியார், நாத்தியாகிய பெரியவர்களை நீ அலக்ஷியம் செய்தாயா? இல்லையேல் அத்தகைய அபிப்பிராயம் உனக்கு உண்டாவானேன்? என்னை விவேக மற்றவனென்று சொல்வது தகுதியல்ல. என் விவேகத்தின் உழைப்பால்தான் இந்த வீட்டில் எல்லோரும் புசிக்கிறார்கள். என் மனதில் தோன்றியபடி நான் செய்ய எனக்கு ஸ்வதந்திரம் இருக்கவேண்டும். அதைப் பிறர் ஆக்ஷேபிப்பது சரியல்ல. என் மனைவி துஷ்டையென்று தோன்றினால் அவளைத் தக்ஷணமே சிக்ஷிப்பேன். உன் கணவன் வீட்டில் அவர் உன்னைக் கொடுமையாய் நடத்தி அலக்ஷியம் செய்தால் அது உனக்குப் பிரியமா யிருக்குமா? உன்னைப்போல் தானே என் மனைவியும் ஓர் பெண்?

தாயும் தமக்கையும் :—ஐயையோ! மகனே, அந்தச் சிறுக்கி உனக்கு மருந்திட்டுவிட்டாள், அதனாலேதான் உன் புத்தி கெட்டுப் போயிற்று. நீயும் இப்படிப் பேசத் தொடங்கிக்கொண்டாய். போச்சு குடும்பம்!

***

ரகசியங்கள் வெளிவரும் விதம் :—

நாயகன்:—வீட்டுக்குள்ளேயே இருக்கும் உனக்குப் பல வீட்டுப் புருஷர்களின் ரகசியங்கள் எப்படித் தெரிகின்றன?

நாயகி :—அந்தந்த ஆடவர்களின் ரகசியங்களை அவர்களின் பெண்களுக்கு மறைத்து வைக்க முடிகிறதா? அந்தப் பெண்கள் தங்களின் மனச் சலிப்பை என்னோடு சொல்லிக்கொள்ள வருவதில் மறைந்திருப்பதெல்லாம் வெளியில் வந்து விடுகின்றன.

நாயகன் :—நீயும் இப்படித்தான் என்னைப்பற்றி அவர்களிடம் தினமும் சொல்லுகிறாயோ?

***

தெரிந்தவரிடம் உளராதே :—

சங்கீத வித்வான் :—எனக்கு ஜ்வரம் 160 டிகிரிக்குமேல் போய்விட்டதால், தங்களிடம் முன்பணம் பெற்றும் தங்கள் குமாரனது விவாகத்தின் போது பாட்டுக்கச்சேரிக்கு வரக்கூடவில்லை.

ரஸாயன சாஸ்திரி :—தாங்கள் வேறிடத்தில் பாட்டுக் கச்சேரிக்குப் போனீர்களோ? மேலும் ஒரு முக்கிய விஷயம். ஜ்வரம் 160-டிகிரியா? இது ஒரு அதிசய சிந்தாமணியாய் இருக்கிறது! பெருத்த ஜ்வரம் அடித்தால் 105-டிகிரி காண்பிக்கும்; பின்னும் ஜ்வரம் அதிகரித்தால் 106, 107-க்கு கூட ஏறலாம்; அதற்குமேல் காட்டாது. ஏனென்றால், உடனே நோயாளிக்கு ஜன்னியுண்டாகி 90-டிகிரிக்கு கீழே காண்பிக்கும். அப்படியிருக்க, தங்களுக்கு 160-டிகிரி காண்பித்த அந்த அற்புத விநோத உஷ்ணக் கருவி (தெர்மாமீடரை) ஏன் சென்ற வருஷம் சென்னையில் கூடிய அகில இந்திய பொருட் காக்ஷியில் வைக்காமற் போனீர்கள்?

சும்மாஎன்றால் சும்மா; கணக்குஎன்றால் கணக்கு

அவர் அந்த உனது அரையணா பாக்கியையும் அவ்வளவு கண்டிதமான கணக்கோடும் திருப்பித் தருவது ஏன் தெரியுமா? நாம் அவருக்குக் கொடுக்கவேண்டிய பணத்திலும், அவ்வளவு கண்டிதமாய் ஒரு காசுமுதல் கணக்காய்ச் செலுத்திவிடவேண்டுமென்பதை நமது மனதில் பதிய வைப்பதற்காகவே அந்த அல்ப அரையணாவையும் கணக்கு பார்த்து நமக்குத் தந்து நமது தலையில் பலமாய்க் குட்டுகிறார். தெரிகிறதா?

பிரபஞ்சதரிசனம்

திருக்கோகரணம் துளுவ நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். முன் காலத்தில் இராவணன் கைலாசத்தில் சிவ பெருமானைப் பிரார்த்தித்து மஹா லிங்கத்தைத் தனக்குத் தந்தருளும்படி வேண்ட, அவ்விதமே சிவ பெருமான் மஹா லிங்கத்தை அவனிடம்கொடுத்தருளி, இதனைப் பூமியில் எந்த இடத்திலும் வைக்காமலும், வாகனங்களில் ஏருமலும் நீயேகரங்களிற்றாங்கி கொண்டு செல்லுதி என்று விடைகொடுத்தனுப்பினார்.

***

அவ்விதமே ராவணன் மஹா லிங்கத்துடன் வருகையில், இந்த லிங்கம் இலங்காபுரத்திற்குச் செல்லக்கூடாதென்று தேவர்கள் கருதியவராய் அதைத் தடுப்பதற்காக விநாயக மூர்த்தியை வேண்டிக் கொண்டு அவரையனுப்பினர். விநாயகப் பெருமானும் ஒரு பிராமணச் சிறுவன் போல் ராவணன் முன்பு தோன்றினார். அத்தருணம் ராவணனுக்கு விநாயகப் பெருமானின் ஏவுதலால் வயிற்றில் நீர் பெருகி விட, அதனால் சலவாதைக்கு ஒதுங்க வேண்டிய அவசரம் உண்டாகி, எதிர்ப்பட்ட அப்பிராமணச் சிறுவனிடம் மஹா லிங்கத்தைச் சிறிதுநேரம் வைத்துக் கொண்டிருக்கச் சொல்ல, அதற்கு அச்சிறுவன் தான் மும்முறை கூவியழைப்பேனென்றும் அதற்குள் வாராவிடில் மஹா லிங்கத்தைப் பூமியில் வைத்து விடுவேனென்றும் சொல்ல, ராவணனும் அதற்கு உடன்பட்டுச் செல்ல, அவன் திரும்பி வருமுன் மும் முறை கூவி, அவன் வாராததால் மஹாலிங்கத்தைப் பூமியில் வைத்து விட்டார். அதன் பின் இராவணன் வந்து மஹா லிங்கத்தைத் தூக்க முயல, அது வாராமற் போகவே, சிறுவன்மீது கோபித்துத் தலையிற் குட்டி வெறுங்கையனாய் இலங்கைக்குச் சென்றதாக ஸ்தலபுராணம் கூறுகின்றது.

***

இதே விஷயம் வேறுவிதமாக ஸ்ரீரங்க ஸ்தல மகாத்மியத்தில் கூறப்படுகின்றது. அயோத்தியிலிருந்து ஸ்ரீ விபீஷணாழ்வான் ஸ்ரீரங்க விமானத்தைப் பெற்றுத் திரும்பி வருகையில் காவிரி கொள்ளிடம் இரண்டுக்கும் நடுவில் அவருக்கு சிறு நீர் உபத்திரவம் உண்டாகிவிட, அக்காலை விநாயக மூர்த்தி சிறுவனது உருக்கொண்டு அவர் முன்பு எதிர்ப்பட, அச்சிறுவனிடம் ஸ்ரீரங்க விமானத்தை சிறது நேரம் வைத்துக் கொண்டிருக்கும் படி வேண்ட, அச்சிறுவனும் மும்முறை கூவி, யழைப்பதற்குள் வாராவிடில் விமானத்தைப் பூமியில் வைத்து

இவன் ஆதியிலிருந்த நிலைமை தெரியுமா? அவன் வரும்போது எந்த வேலைக்கு வந்தான் தெரியுமா? என்று தக்க பதவியிலுள்ளவர்களைக் கேவலப் படுத்துவர் சில பொறாமைக்காரர்கள்.

விடுவேனென, அதற்கு இணங்கி அவரும் செல்ல, அவர் திரும்பி வருமுன்னம் மும்முறை கூவியழைத்துவிட்டு விமானத்தைப் பூமியில் வைத்துவிட, அதன்பின் விபீஷணர் திரும்பி வந்து விமானத்தை எடுக்க முயலுகையில் அதுவாராமற் போய் சினமுற்று அச்சிறுவனின் சிரசில் ஓங்கிக் குட்டியதாயும், அந்தக் குட்டின் பள்ளம் திரிசிரபுரமலையின்மீது கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமான் சிரசில் இருப்பதாயும் சொல்லப்படுகின்றது. அதன் பின் விபீஷணர் ஸ்ரீ ரங்கநாதனைத் துதித்துவிட்டுச் சென்றனர்.

***

திருக்கோகர்ணத்தைப் பற்றிய வரலாற்றில் தமயனை இராவணன் செய்தி வருகின்றது. ஸ்ரீரங்கத்தைப் பற்றிய வரலாற்றில் தம்பியான ஸ்ரீ விபீஷணரின் வர்த்தமானம் கலக்கின்றது. இரண்டிடத்தும் விநாயகர் தோன்றித் தலையிற் குட்டு பெற்றுக் கொள்கின்றார். அங்கு மஹா லிங்கம் ; இங்கு ஸ்ரீரங்க விமானம். இவ்விரு வரலாறும் ஒத்திருப்பது மிக்கரஸமான தன்றோ ?

***

இவ்வுலகில் மனிதன் உயிரோடிருக்கும் காலத்தில் அவனிடம் மூன்று அம்ஸங்கள் பொருந்தியிருக்கின்றன. அவையாவன :—

(1) சரீரம், (2) பிராணன். (3) ஜீவன், என்பு, தோல், நரம்பு, மாமிசம் —முதலிய தாதுக்களால் கட்டப்பட்டதாய், சடரூபமானதாய் விளங்கும் நம்முடைய ஸ்தூல உடம்பே சரீரமெனப்படும். சடரூபமான நம்முடைய சரீரத்தில் ஆன்மா இயங்குவதற்கு உபகாரமாய் நிற்கும் ஒரு வகையான சக்தியே பிராணன் எனப்படும். சரீரத்தினும் வேறாய், பிராணனினும் வேறாய் விளங்கும் சுத்த அறிவுமயமான சித்துப் பொருளே ஆன்மா எனப்படும். இங்கே கவனிக்கப்படவேண்டிய விஷய மொன்றுண்டு. அதாவது பிராணன்— ஜீவன் இவ்விரண்டும் ஒன்றுதான் என்று தப்பிதமாக உணர்ந்துவிடலாகாது. பிராணன் என்பது வேறு ; ஜீவன் அல்லது ஆன்மா என்பது வேறு.

***

பிராணன் அழிந்துபோகக் கூடியது ஆன்மாவோ எத்தகைய மாறுதல்கட்கும் உட்படுவதன்று. பிராணன் என்பது மின்சாரம், உஷ்ணம் இவைகளைப்போல் சில காரணங்களால் உற்பத்தியாகும் ஒரு விதமான சக்தியாகும். ஆகவே, பிராணனுக்கு எப்போது உற்பத்தியுண்டோ அப்போதே அதற்கு முடிவுமுண்டு என்பது நிச்சயம். ஆனால், ஆன்மாவுக்கோ உற்பத்தியுமில்லை. முடிவுமில்லை.

எனவே, பிராணனோடு கூடிய மானிட சரீரத்தில் வசிக்கும் ஆன்மாவே 'மனிதன்' என்னும் பெயரால் அமைக்கப்படுகிறது.

என்று கூறுதல் தவருகாது. இதிலிருந்து "மரணம்" என்றால் என்ன ?—என்பதை நாம் ஒருவாறு ஆராய்தல்கூடும். ஆன்மாவும்சரீரமுந்

அடங்காத மனைவி, தன்னை அவமானப் படுத்தும் மாதா, இந்த இரண்டும் கூடிக்கொண்டாலோ தீயும் காற்றும் சேர்ந்தது போல்தான். இந்தப் பாடுபட்டவரைப் போய்க் கேட்டுப் பாருங்கள்.

ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போதும் அவசரமே மரணம் எனப்படும். இந்தப் பிரிவு எப்போது உண்டாகிற தென்றால், பிராண சக்தியினால் சரீரம் இயக்கப்படாமல் இருக்கும் சமயத்தில் உண்டாகிறது. அதாவது, சரீரத்தை இயக்கி வரும் பிராணனுடைய சக்தி குறைந்து அழியப் போகும் தருவாயில் ஆன்மா சரீரத்தை விட்டுப் பிரிந்து போய்விடுகிறது. இதை இன்னும் விளக்க வேண்டுமானால் எரிந்து கொண்டிருக்கும் ஒரு தீபத்தை இந்த மானிட சரீரமாகச் சொல்லலாம். அதில் எண்ணெயும் திரியும் பிராணனாகும் அது இருக்கிற விளக்கு சரீரமாகும்; எரியும் ஜோதி ஆன்மாவாகும். ஒவ்வொரு தேகத்துக்கும் அதனதன் ஆயுட்கால அமைப்பின் விதிக்கேற்ப எண்ணெயும் திரியுமாகிய பிராணன் வெகு கணக்காக அளந்து வைக்கப்பட்டிருக்கின்றது போலும், குறித்தகாலம் வர்த்தும் எண்ணெயும் திரியும் எரிந்துபோக உடனே தீபமும் அணைந்து விளக்கிலிருந்த பிரகாசமாகிய ஆன்மா அதை விட்டு நீங்கிப்போகின்றது போலும். விளக்கு அணைந்தபின் அந்த விளக்குச் சட்டி மட்டும் பிராணன் இழந்த சரீரமாய் மதிப்பற்றுக் கிடக்கின்றது போலும்.

***

மரம், செடி, முதலிய தாவர வர்க்கங்களும், மிருகங்களும் உயிர் வாழ்வதற்குச் சிற்சில நிலைமைகள் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. சில செடிகள் பட்டுப் போகாமல் இருப்பதற்குக் காற்று அவசியம் வேண்டியிருக்கிறது. வேறு சில செடிகள் தண்ணீரிலேயே வளரும் இயல்புடையதாயிருக்கின்றன. சில மிருகங்களும் பறவைகளும் ஜீவித்திருப்பதற்குக் காற்று இன்றியமையாததாயிருக்கின்றது. தண்ணீரை விட்டு வெளியே வந்தால் மீன்கள் இறந்து போகின்றன. ஒரு சிறுவனைத் தண்ணீருக்குள் சிறிது நேரம் அமிழ்த்தினால் உடனே அவன் இறக்கின்றான். இதனால் சிற்சில பிராணிகள் உயிர் வாழ்வதற்கு சிற்சில நிலைமைகள் அவசியமாய் வேண்டப்படுகின்றன. என்பதும், இந்த நிலைமைகளிலிருந்து அவைகள் பிறழுமானால் அவைகட்கு மரணம் நேரிடுகிறதென்பதும் இனிது புலப்படுகிறதன்றோ? இதுகாறும் கூறியவற்றிலிருந்து சரீரம், பிராணன், ஜீவன் முதலியவற்றைப்பற்றி ஒருவாறு உணர்க.

***

ஹிந்து - முஸ்லிம் ஸம்பந்தம் கபீர்தாஸ் சரித்திரத்திலும், ராமதாஸ் சரித்திரத்திலும், ஸ்ரீ ராமநுஜர் சரித்திரத்திலும் வருவது மட்டு மல்ல. வங்காளத்தில் அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகளின் சரித்திரத்திலும் காண்கின்றோம். ஸ்ரீ சைதன்யரிடத்தில் அப்போது வங்காளத்தை யாண்ட நவாப்பு அத்யந்த பக்தரா யிருந்ததாகவும், ஸ்ரீ சைதன்யரின் விருப்பத்திற்கிணங்க அனேக தானதர்மங்களை நடத்தியதாகவும், இப்போது ஸ்ரீ சைதன்யரின் சமாதியைச் சேவிக்கச் செல்லும் யாத்ரீகர்கள் நவாபின் சமாதியையும் தரிசித்து ஆகர்திக்கின்றனரென்றும் "அமிர்த பஜார் பத்திரிகா" ஆசிரியர் எழுதியுள்ள ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய சரித்திரத்திலிருந்தும் அறிகின்றோம். உள்ள சங்கதிகளை நாம் இங்கு குறிப்பிட்டதே யன்றி இவற்றைப்பற்றி நமது அபிப்பிராயம் அநாவசியம். ஏதோ அவ்வக் காலங்களின் போக்குக் கேற்ப இச் சம்பவங்கள் நேர்ந்தன போலும்! இது பொய்யோ மெய்யோ-அதனையும் அறியோம்.

மிருக-பக்ஷி-ஊர்வனங்களின் மகா நாடு!

கூட்டமப்பா கூட்டம்! சென்னையிற் பெரிய கூட்டம்! என்ன கூட்டம்? காங்கிரஸ் மகா சபைக் கூட்டமா? கதர் கண்காட்சிக் கூட்டமா? பொருள் காட்சிக் கூட்டமா? கிலாபத் மகா நாடு கூட்டமா? சங்கீத மகா நாட்டின் கூட்டமா? பார்ச் வேடிக்கைக்கூட்டமா? ஸமூக ஆச்சார மகாநாட்டுக் கூட்டமா? பிரம்ம ஞான சபைக் கூட்டமா? வன்னியகுல க்ஷத்திரியர் கூட்டமா? யுவர் மகா நாட்டுக் கூட்டமா? மாணுக்கர் மகாநாட்டுக் கூட்டமா? சுதேச சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டுக் கூட்டமா? முஸ்லிம் கல்வி மகாநாட்டுக் கூட்டமா? ஆஸ்திகர் மகா நாட்டின் கூட்டமா? கைத்தொழில் வர்த்தக மகா நாட்டுக் கூட்டமா? இஞ்சினீயர்கள் மகா நாட்டுக்கூட்டமா? வர்ணாச்சிரமதர்ம மகாநாட்டுக் கூட்டமா? சாதுக்கள் மகா நாட்டின் கூட்டமா? ஸ்ரீ வைஷ்ணவர் மகா நாட்டின் கூட்டமா? தாருண்யர் மகாநாட்டின் கூட்டமா? ரயில்வேத் தொழிலாளர் மகா நாட்டின் கூட்டமா? ஐக்கிய இந்திய வர்த்தக சங்க மகா நாட்டின் கூட்டமா? வேலை யில்லாதார் மகா நாட்டின் கூட்டமா?

***

இத்தனை கூட்டங்களும் சென்ற டிஸம்பர் மாதத்தில் சென்னையிற் கூடி வாய் ஓயாமற்பேசி முடிவடைந்தது யாருக்குத்தான் தெரியாது? இவற்றைத் தவிர பத்திரிகைகளில் வெளிவாராத பல கூட்டங்களும் நடந்தேறின. சோம்பல் மகா நாட்டில் தின்னபோத்து ராயரின் தலைமைப் பிரஸங்கம் மிக்க அபூர்வம்! உழைத்துப்பாடுபட்டுவேலை தவறாது சாதத்தைக் கொட்டி நமக்குப் பரிமாற வேண்டு மென்று அவர்கள் தலையில் விதியிருக்கும்போது, நாம் எதற்காக வேலைக்குப் போய்ப் பொன்னான மேனியைக் கெடுத்துக் கொள்ள வேணுமென்று வெகு அழகாகப் பேசினார். வரதக்ஷிணை மகாநாட்டில் வரதக்ஷிணையின் தொகையை இன்னும் அதிகப்படுத்தி, பெண்ணைப் பெற்றவளின் தாலியைக் கூட வா

தக்ஷிணையாக வாங்கிவிட வேண்டுமென்று தீர்மானமானது. காபி ஹோட்டல் மகா நாட்டில் இப்போது ஒரு குடம் பாலுக்கு ஒருகுடம் ஜலம் விடுவதை இன்னும் இரண்டு பங்கு ஆக்க வேண்டு மென்றும், இட்லி முதலியவற்றை இன்னும் சிறிய அளவில் தயாரிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இன்னும்—பொறுமைக்காரர்கள் மகாநாடு, குண்டுணிகளின்மகாநாடு, வைகுண்ட வைத்தியர்களின்மகாநாடு, பெருமைப் பூசாரிகளின் மகா நாடு, கௌரவப் பட்டதாரிகளின் மகா நாடு, கொடுமைக்காரப் புருஷர்களின் மகாநாடு, மதனோல்லாஸ மகா நாடு—இன்னும் பல நாடுகளும் கூடி முடிந்தன.

***

விகடன் இந்த மகா நாடுகளைப் பற்றியெல்லாம் இப்பொழுது பேச வரவில்லை. விகடனை அக்கிராஸனாதிபதியாகக் கொண்டு நடபெற்ற—மிருக-பக்ஷி-ஊர்வனங்களின் மகா நாட்டைப் பற்றியே இப்பொழுது சொல்ல வந்தது. இம்மகாநாடு காங்கிரஸ் பந்தலிலேயே கூடிற்று. அரி—ஆளி—கேசரி,—கண்டீரவம் என்ற பிருதுகளைப் பெற்ற திருவாளர் சிங்கம் அவர்கள் தமது வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்தார்கள். ஹா! இந்த உலகத்தில் மனித ஜீவன்கள் எவ்வளவு பயங்கொள்ளிகள்? ஒரு மானிடப் பூண்டின் முன்பு நான் எதிர்ப்பட்டேனாகில், உடனே தன் ஆயுள் நாள் முடிவுக்கு வந்துவிட்டதென நடுங்கிவிடுகிறான். அவர்கள் முகத்தில் 'பவிசு' இல்லாமல் என்னைச் சேர்ந்தவர்களின் முகத்தை அரசனின் சிங்காதனம்வரைக்கும் வைத்து அழகு பார்க்கிறார்கள்! என்னைப் போன்ற கம்பீரமான தன்மை அவர்களிடம் காணேம். பேர் பெரிதாயிருக்கிறதே தவிர, உள்ளுக்கு மிகவும் அல்ப புத்தி படைத்தவர்களாயிருக்கிறார்கள். வயிற்றுப் பிண்டத்திற்காக இன்னொருவனிடம் வாழ் நாள் முழுதும் அடிமைப்பட்டுத் தொலைக்கிறார்கள்! ஒருவன் ஒரு பிராணியைக் கொல்லு, இன்னொருவன் அதன் மாமிசத்தை விலைகொடுத்துப் பெற்றுப் போகிறான். இந்த நீசத்தன்மை எங்கள் வர்க்கத்தாரிடம் இல்லை. எங்களில் இன்னொன்று கொன்று எறிந்ததை வேறொன்று தொடாது. புதிதாக ஒன்றைத் தானே பிடித்துத் பட்சிப்பதே எங்கள் வழக்கம். சில மனிதர்கள் எங்களை வெகு தந்திரமாய்ப் பிடித்துச் சென்று இரும்புக் கூட்டில் அடைத்து கௌரவ விருந்தினர் போல் எங்களை நடப்பிப்பதையும் பார்த்திருக்கிறேன் என்று பேசினார். அதன் பின்பு விகடன் எனது அக்கிராஸனப் பிரஸங்கத்தில், தங்களின் முயற்சியாலும் உழைப்பாலும் ஐக்கியத்தாலும் ஸ்வராஜ்யப் பேற்றினை யடைவதை விட்டு விட்டு இன்னொருவரிடம் கெஞ்சிப் பிச்சை கேட்கும் மனித ஸமூகங்களை விட, ஆரண்யங்களில் சுயேச்சையாய்த் திரியும் மிருக-பக்ஷி-ஊர்வனங்களின் வாழ்க்கை உயர்நலஞ்சார்ந்தது என்று குறிப்பிட்டுப் பேசினேன்.

***

திருவாளர் பசு அவர்கள் மனிதன் மகா சுயநல முள்ளவன், தன் காரியக் குட்டி என்று பிரேரணை செய்து பேசியதாவது:—இந்த மனிதன் தனது லாபத்துக்காக எங்களுக்கு வைக்கோலும் புண்ணாக்கும் இடுகிறானே தவிர, எங்கள் மீது இரக்கங்கொண்டு செய்துவிடவில்லை. நாங்கள் ஈன்ற செல்வங்களை அவைகள் எங்களிடம் பால் குடித்துக்கொண்டிருக்கும்போதே அவற்றின் கழுத்துக் கயிற்றைப் பிடித்து இழுத்துச் சென்று விடுகிறான்! ஹா! அந்த சமயம் நாங்கள் எங்கள் செல்வக் குட்டிகளைப்பார்த்து செவிகளைத் தூக்கியபடி கண்களை அதன் பக்கமே திருப்பி எவ்வளவு பரிதாபப் பார்வையோடும் பார்த்து வாடுகிறோம் தெரியுமா? எங்கள் ஆத்திரத்தையும், எங்கள் நெஞ்சு துடிக்கும் துடிப்பையும் இந்த மனிதப்பூண்டு அறியுமா? கன்றுக்குட்டிக்குப் பாலைக் கொடுக்காமல் கறந்து கொள்ளும் இந்த மானிட உருவங்கள் எவ்வளவு கொடியவை என்று பேசினார்.

***

திருவாளர் நாய் அவர்கள் மனிதனைவிட நன்றிமறந்தவன் வேறில்லையென்றும், நன்றி மறவாத எங்கள் வர்க்கத்தாரின் பெயரால் ஒரு மனிதனைக் குறிப்பிட்டால் அது ஒரு கேவலச் சொல்லாக இருப்பது வெகு அதிசயமான சங்கதியென்றும், உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்வதே மனிதப்பூண்டுகளின் தொழில் என்றும் பிரஸங்கித்தார். அதன் பின் கனம் கழுதையவர்கள் எழுந்து, மனிதன் லாபத்தைக் கருதுகிறானே தவிர, தனக்குத் துணையாயிருந்து தொழில் செய்பவர்களின் வயிறு நிறைந்ததா என்று கவனிக்கிற பெருந்தன்மைப் புத்தியே கிடையாதென்றும், தன் வர்க்கத்தார் எவ்வளவு உழைத்தும், ஒரு நாளாவது ஒரு பிடி புல் போட்டுத் தாங்கள் உண்டதில்லையென்றும், வீதி சுற்றி வயிற்றை நிரப்பிக் கொண்டு வந்து எஜமானர்களுக்கு உழைக்கும்படியிருக்கிறதென்றும், சீக்கிரம் தங்களுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று மானிட வர்க்கத்தாருக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டுமென்றும் பேசினார்.

***

ஸ்ரீமான்களான சிட்டுக் குருவி, கோழி, மான், இவர்கள் எழுந்து மனிதன் ஒரு பலஹீனமான பாண்டமென்றும், காம விருப்பம் மனித வர்க்கத்திற்கு அதிக மிருப்பினும், தங்களைப் போன்று பூர்ண ருசிகரத்தை உச்சிவரை எட்டிப்போய் அநுபவிக்க அவர்களுக்கு சக்தியில்லையென்றும், அவர்களின் வாழ்க்கையே காதல் வாழ்க்கையாய் இல்லாமல்கலக வாழ்க்கையாய், கவலை வாழ்க்கையாய் மண்மேடிட்டுக் கிடக்கின்றதென்றும் கேவலமாய்க் கூறினர். பிரம்மஸ்ரீ கருடன் அவர்கள், இந்த மானிட வர்க்கம் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடம் போக விரும்பினால், அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிற பல பெயர்களிட்ட வீதிகளைக் கடந்து செல்லவேண்டுமென்றும். தங்களைப் போல் நினைத்த இடத்திற்கு அந்த க்ஷணமே நேர் பாதையாய் ஆகாய வழியிற் செல்ல முடியாதென்றும், இனி இவர்கள் வேகமாய்ச் செல்வதற்கு, குதிரை, மாடு இவற்றின் துணையைக் கோருகிறார்களென்றும், மோட்டார், ரயில் முதலிய அதிக வேக யந்திரங்களைக் கொண்டு சவாரி செய்யப் பார்ப்பதில் தினமும் பல படுகொலைகள் நடக்கின்றன வென்றும் கூறினார். புறாக்களின் ஸமூகப் பிரதிநிதியார் பேசியதில் தாங்கள் தங்களின் பெட்டைப் புறாக்களிடம் வைக்கும் அன்பு, மதிப்பு தாக்ஷிண்யம் இவற்றை மனிதர்கள் தங்கள் பெண்பாலாரிடத்தில் காட்டுவதில்லையென்றும், பெண் மக்களை பெண்கட்டைகளென்று பழிக்கிறார்களென்

றும், பெண்ணோ பிறந்தது என்று பெருங்கவலையோடு ஏங்குகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

***

தேனீக்களின் பிரதிநிதியார் மனிதன் பிறர் சொத்தை அபகரிக்கப் பார்க்கும் பேராசை கொண்டவனென்றும், தாங்கள் பிரயாசைப் பட்டுச் சேர்க்கும் தேனை யெல்லாம் எவ்விதமோ சுவாஹா செய்துவிடுகிறானென்றும் கேவலப்படுத்திச் சொன்னார். பிறகு புனுகுபூனையார் எழுந்து, தங்களின் மலத்தை மனிதர்கள் மகா வாசனை யுள்ளதாகப் பாவிக்கிறார்களென்றும், தங்களின் மலவாயிலை அப்படியே அறுத்தெடுத்து விடுகிறார்களென்றும், அதைக் கடவுளுக்கும் வைத்து அசங்கிதம் செய்கிறார்களென்றும் மனிதனை விட ஆபாசப் பிராணி வேறில்லை யென்றும் கூறினார். பிறகு திரு மிகு கஸ்தூரி மான் அவர்கள் எழுந்து, தன் வயிற்றிலுள்ள கஸ்தூரிக்காகத் தன் வர்க்கத்தை மானிட அக்கிரமிகள் வேட்டை யாடிக் கொல்லுகிறார்களென்றார். இவ்விதமே பட்டுப் பூச்சியாரும் தன்னைக்கொன்று மனிதர்கள் பட்டு எடுக்கிறார்களென்று சொல்லிற்று. திருவாளர்களான மீன்களும் ஆடுகளும் தாங்கள் தினமும் மனிதர்களால் கொலை செய்யப்படும் அக்கிரமங்களைச் சொல்லிக் கண்ணீர் விட்டழுதன.

***

பின்பு ஸ்ரீமான் நரி அவர்கள், மனித வகுப்பில் படித்த ஆசாமிகளெல்லாம் சரியான நரிக்குட்டிப் பிறப்புக்களே யென்று பிரஸங்கித்தார். உயர் திருமிகு தேள் அவர்கள் மனிதனைக் கண்ட இடமெல்லாம் வெடுக்கு வெடுக்கெனக் கொட்டி அகங்காரத்தை யடக்க வேண்டுமென்று உபன்யாசித்தார். ஸர்பங்களின் பிரதிநிதியார், மனிதர்கள் வழங்கும் பழமொழிகளில்—"உன்னைப் பாம்பு பிடுங்க" என்றும் "பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்றும் பல வாக்கியங்கள் இருக்கின்றனவென்றும், ஸர்ப்ப வணக்கம் மனிதர்களிடம் அதிக மென்றும், என்னதான் தாழ்ந்து பணிந்தாலும் அவர்களை உடனே தீண்டி மாளச் செய்வதே சரியென்றும், மனிதர்களின் ஹிம்ஸை யில்லாவிட்டால் உலகத்தில் ஜீவிக்கும் ஸகல பிராணிகளும் க்ஷேமமாய் வாழ முடியுமென்றும் புகன்றார். கடைசியாக, விகடன், எனது முடிவுரைப் பிரஸங்கத்தில் மனித வர்க்கத்தின் சிரேஷ்டமான அம்சத்தை விளக்கி, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஸகாயமாய் இருந்து உதவிக் கொள்வதே சிருஷ்டியின் நோக்கமென்றும், பகையையும் பேத பழிப்புப் புத்திகளையும் விட்டொழித்து அன்னியோன்யமாய் வாழப்பார்க்கவேண்டுமென்றும் கூறி மகாநாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தேன். இம்மகாநாட்டை யொட்டி ஒரு பொருட்காட்சியும் கூடிற்று. அதில் மனிதவர்க்கத்தார் கொன்று தின்ற மிருக-பக்ஷி-ஊர்வனங்களின் நாநாவிதமான தோல்களும் பிய்த்து எறியப்பட்ட பக்ஷிகளின் இறக்கைகளும், மனிதர்கள் உபயோகிக்கும் வலை தினுசுகளும், மிருக பக்ஷிகளைக் கொல்லும் துப்பாக்கிகளும் இன்னும், இவைபோன்றவைகள் வெகு அழகாய் சேகரிக்கப் பட்டிருந்தன. புலி, சிங்கம், இவைகள் மென்று தின்ற மனிதர்களின் எலும்புக் குவியல்களும், சர்ப்பங்களால் கடியுண்ட மனித சவங்களும் காட்டப்பட்டன. தேள்கள் கடித்து மனிதன் படும் அவஸ்தையை

விளக்க ஒரு சினிமா படக் காட்சியும் காட்டப்பட்டது. பின்னும் அந்த சினிமாவில் ஒருவலைஞன் ஒரு மீனைப் பற்களால் கடித்துக் கொல்லப் பார்ப்பதும், அந்த மீன் நழுவித்தொண்டைக்குள் நுழைந்து வயிற்றுக்குட் சென்று மனிதனைச் சாகவைப்பதும், கோழி ஆடு இவைகள் கொல்லப் படுகையில் படும் அவஸ்தைகளும் இன்னும் எத்தனை எத்தனையோ காட்சிகளும் காட்டப்பட்டன. மொத்த பாகத்திற்கு காங்கிரஸ் சபையைவிட இந்த மிருக பக்ஷி சபை மேலாக நடந்ததென்றே விகடன் சொல்லி முடிப்பதோடு இம்மகா நாட்டை வாழ்த்தி, இப்போது முட்டை யிட்டுள்ள 1928-ம் வருஷத்திற்கு ஒரு வந்தன சோபனமும் கூறி, இவ்வளவோடு விடை பெற்றுக் கொள்கிறேன். ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!

வெளியாய் விட்டது! வெளியாய் விட்டது!!

அபூர்வமான வேலைப்பாடுகளமைந்த

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் திருவுருவத்துடன் கூடிய

ஆநந்த குணபோதினி

விபவ வருஷத்திய 96-பக்கங்களுள்ள

அற்புத திருக்கணித பஞ்சாங்கம் விலை அணா 4-தான்

வியாபாரிகளுக்குத் தாராளமான கமிஷன்.

☞ "ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகையின் புது வருஷ சந்தாவை மணியாடர் மூலம் மார்ச்சு௴ 31உக்குள் அனுப்பி விடும் கண்ய சிரேஷ்டர்களுக்கெல்லாம் இந்த விபவ வருஷ பஞ்சாங்கம் ஒன்று இனாமாகக் கொடுக்கப் படும். உடனே சந்தாவை யனுப்பி முந்திக்கொள்ளுங்கள்.

பெண்கள் எந்தத் தெரியாத இடத்துக்குச் சென்றாலும் ஒரு புது சிநேகம்—அறிமுகம் பிடித்து விடுகின்றனர். ஆண்களோ விலகுவதில்தான் சாமர்த்தியம் காண்பிப்பர்.

கல்விமான் தான் தெரிந்தது மிக்கசொற்பம் என்னெண்ணுகிறான். உலகினரோ அவனை மகா வித்தியாசாகரம் எனப் போற்றுகின்றனர்; இந்தப் பேதமென்னலோ!

சென்றுபோன நாட்கள்

த்விஜேந்திர லால் ராய்.

1864—1913.

(468-ம் பக்கத் தொடர்ச்சி)

1882-ம் வருடம்

அவர் தாம் 12-வயதுமுதல் அப்பொழுதுவரை எழுதியுள்ள எல்லாப் பாக்களையும் 'ஆர்ய சாதா' முதற்பாகம் என்ற புத்தகமாக வெளியிட்டார்.

அதன் பின்னர் கவர்ன்மெண்டாரின் செலவின் பேரில் இங்கிலாந்திற்குச் சென்று கிருஷித்தொழில் கற்றுக் கொள்ள அனுப்பப்பட்டார். அப்பொழுதும் கல்கத்தாவிலிருந்து தனது இரு சகோதரர்களால் வெளியிடப்படும் 'பதாகா' என்னும் வாரப் பத்திரிகையில் 'வெளி நாட்டில் வசிக்கும் உள்நாட்டோன்' என்ற புனைப் பெயருடன் பல கடிதங்கள் எழுதியுள்ளார். இங்கிலாந்தில் வசிக்கையில் இவர் கொஞ்சம் பிரஞ்சு பாஷையும் கற்றுக் கொண்டார். அப்போது அவர் ஆங்கிலத்திலும் பல கவிதாக்கள் எழுதி பின்னர் அவைகளை "Lyrics of Ind" என்ற பெயருடன் புத்தகரூபமாக வெளியிட்டார்

இங்கு இவர் பிரசித்த நாடகங்களைப் பார்த்து வந்தார். அதனால் பிற்காலத்தில் நாடகம் எழுதுவதற்கு இவை ஒரு சாதனமாயின. தாய் நாடு திரும்புமுன் த்விஜேந்திரலாலின் தாயும் தகப்பனாரும் தரணியை விட்டேகினர்.

லண்டன் நகரில் இவர் சுமார் 3-வருடம் வாசித்தார். 1886-ல் சிசிடர் காலேஜில் கிருஷித்தொழில் பயின்று F. R. A. S. என்ற பட்டம் பெற்றார். பின்னர் M. R. A. C. என்ற பட்டமும், M. R. S. A. E. என்ற பட்டமும் முறையே கிடைத்தன.

மனோவியாதியாலும் சரீரவியாதியாலும் பீடிக்கப்பட்ட இவர் சுமார் மூன்று வருடங்களுக்குப் பின்னர் தாய் நாட்டிற்குத் திரும்பினர். 1886-ம் வருடம் டிசம்பர்மீ இவர் டிப்டி மாஜிஸ்ட்ரேட் ஆக்கப்பட்டார். கடல் கடந்து அயல்நாடு சென்றிருந்தாலும் மறுபடிபிராயச்சித்தம் செய்து கொள்ள மறுத்து விட்டமையாலும் தன் உறவினரால் வாழ்நாள் முழுவதிலும் வெறுக்கப் பட்டதுமன்றி அநாதரவு செய்யவும்பட்டார். இவ்வாசார வியவகாரங்களால் வருத்தமடைந்த இவர் 'ஏக்கரே' என்னுமோர் பிரஹஸனத்தை எழுதினர்.

இச்சமயம் பிரசித்த ஹோமியோபதி டாக்டரான ஸ்ரீயுத பிரதாபசந்திர மாஜும்தாரின் கன்யையான ஸ்ரீமதி சுரவாலா தேவியைக் கண்டு த்விஜேந்திரலால் ராய் காதல் கொண்டார். பின்னர் இருவருக்கும் விவாகம் 1887-ல் இந்து சாஸ்திரப்படியே இனிது நிறைவேறிற்று.

சில ஆண்டுகளுக்கெல்லாம் த்விஜேந்திர பாபு மறுபடி வங்காளி பாஷையில் கவிதைகள் புனைய ஆரம்பித்துத் தம்முடைய சிறிய கவிதைகளையும்பாட்டுகளையும் 'ஹாஸீர்கான்' என்ற புத்தக ரூபமாக வெளியிட்டார். அப்பொழுதே 'ஆர்ய சாதா முதற் பாகத்' தின் இரண்டாம் பதிப்பையும், இரண்டாம் பாகத்தின் முதற் பதிப்பையும் வெளியிட்டார். இப்போது இவருடைய வாழ்நாள் மிகவும் சுககரமாய் இருந்தது. இச்சமயம் இவர் 'ஆஷாடே' என்னுமோர் பாட்டுபுத்தகத்தின் பெரும்பாகத்தை எழுதினர். இப்பொழுது இவர் சங்கீதத்தையும் சரிவரக் கற்றுக் கொண்டார்.

இதனிடையில் இவர் பல உத்தியோகங்களுக்குமாற்றப்பட்டு 1893-ல் தினஜ்பூர் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டாக மாற்றப்பட்டார். அங்கு இவர் 'கல்கி அவதார' மென்னுமோர் பிரஹஸனத்தைஎழுதினர். பின்னர் 1894-ல் ஆப்காரியில்பிரதம இன்ஸ்பெக்டராக மாற்றப்பட்டு த்விஜேந்திரர் இதே உத்தியோகத்தில் 7-8 வருடம் இருந்து வந்தார்.

இன்ஸ்பெக்டரா யிருக்கும்பொழுது பல கிராமங்களையும் பட்டினங்களையும் சுற்ற நேர்ந்ததால் அது பின்னர் நாடகம் எழுதுவதற்கு உபயோகமாயிற்று. இச்சமயம் இவருக்கும் உலகப்பிரசித்தி பெற்ற ரவீந்திரநாத டாகூருக்கும் பரிச்சயம் ஏற்பட்டு இருவரும் பிரிய நண்பராயினர். ஆயினும் பிற்காலத்தில் சாஹித்த விஷயத்திலுள்ள மத பேதத்தினல் இருவருக்கும் ஒரே விதமான விரோதமேற்பட்டுவிட்டது. த்விஜேந்திரலால் பாபூ இச்சமயம் மதுபுரியில் ஒருபெரியவீட்டை வாங்கி அதற்கு 'த்விஜாஸ்ரமம்' என்று பெயரிட்டு தேகஸ்திதிக்காக அங்கு சென்று வசித்துவாலுற்றார். விவாகத்திற்கு பின்னர் கல்கத்தாவில் வசிக்கும்பொழுது த்விஜேந்திரர் கீழ்கண்ட நாடகங்களை வெளியிட்டார். (1) கல்கி அவதாரம் (2) விரஹம் (3) ஆஷாடே (4) த்ரயஹஸ்பர்ஸ (5) பிராச்சித்தம் (6) பாஷாணி (7) சீதை (8) மந்திரகாவியம் (9) தாராபாய்.

த்விஜேந்திரலால் எழுதியவைகளில் முதன்முதல் தாராபாய் நாடகமே நாடகமாக நடிக்கப்பட்டது. இது அவரின் புகழை விருத்தி செய்தது. இவர் பெரிய நாடகாசிரியராக மதிக்கப்படலானர். இவ்வாறு இவர் கீர்த்தி எங்கும்பரவ ஆரம்பித்த சமயத்தில் 1903ளு நவம்பர்மீ 29-ம்தேதி கர்ப்பவதியாயிருந்தஅவர் மனைவி சுரபாலா ஓர் மரித்த சிசுவை யீன்று சுவர்க்கவாசமடைந்தாள். மரணத்தருவாயில் அவளுடன் ஒரு வார்த்தை பேசுவதற்குக்கூட அச்சமயம் த்விந்திரபாபூ ஊரில் இல்லை. த்விஜேந்திரபாபுவிற்கு திலிபகுமார் ராய் என்ற ஓர் மைந்தனும் மாயா என்ற ஓர் மகளும் உண்டு. பத்னியின் மரணசமாசாரத்தைக் கேட்டது முதல் புதிய மனிதராக மாறிவிட்டார். அவருடைய ஆசுதம் அறவே ஒழிந்துவிட்டது. பழைய சிரிப்பு என்பது அவளுடன் சென்றுவிட்டது. அப்படியே சிரிக்க எத்தனித்

பிணியால் குழந்தைபடும ஆத்திரவாதையையும் தாயும் படுகிறுள். தகம் பனைவிட இதில் தாய்க்கே அதிகம். ஏனெனில் அவள் வயிற்றில் பத்துமாதம் சுமந்தவள்.

வியாதி சிலருக்கேவா, அதன்பயமோ வெகுபேருக்கு வருகிறது. ஊரெல்லாம் காலராவாக, தனக்குமட்டும் பூர்ணயுள் என்று ஒவ்வொருவனும் நினைக்கிறுன்!

தாலும் அது கருணை நிரம்பி கண்ணீர் ததும்பியதா யிருந்துவந்தது. அவர் தமிழ்பாஷை மட்டும் கற்றிருந்தால் வள்ளுவரைப்போல "அடிசிற்கினியாளே அன்புடையாளே—" என்று அழுதிருப்பார்.

பந்துக்கள் பலர் எவ்வளவோ முயன்று மறுமணம் முடிக்க எத்தனித்தும் எல்லாம் வீணாயின. அதன் பின்னர் அவர் நாடகசிக்ஷை கொடுப்பதற்கெனதியேடர்களுக்குச்சென்று வந்தார். பத்னியின் மரணத்திற்குப் பின்னர் பத்து வருடம் அவர் உயிர் வாழ்ந்து வந்தார். அதுவரை அவர் பிரம்மசரியத்தை அனுஷ்டித்ததுமன்றி அப்பத்து வருடங்களிலும் ஒருமுறையாவது சோப்பையாவது பரிமள தைலத்தையாவது உபயோகித்ததே யில்லை.

பின்னர் குல்னாகரில் அவர் சிறிது சைன்யத்திலும் வேலை செய்யும்படி சேர்ந்தது. அப்பொழுதே அவர் வீரரச நாடகங்களான துர்காதாஸ், பிரதாபசிங் இவைகளை இயற்றினர். பல ஜனங்களின் வேண்டுகோளின்படி அவர் குல்னாவில் பிரதாபசிங் நாடகத்தை நடத்தி அதில் தாமே சக்தசிங் வேடம் தரித்து பலரும் ஆச்சரியப்படும் வண்ணம் நடித்தார். சில நாட்களுக்கெல்லாம் மூர்சிதாபாத்திற்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கிருந்து கயா In-charge of magistrate ஆக மாற்றப்பட்டார். இங்கு இவர் 'மேவாட்பதன்' 'நூர்ஜஹான்' இவ்விரண்டு நாடகங்களை எழுதியதுமன்றி 'ஆலேக்ய' வென்னும் காவியத்தையும் அச்சிட்டார். அங்கிருந்து விடுமுறை வாங்கிக்கொண்டு கல்கத்தாவை அடைந்து தன் மனைவியின் ஞாபகார்த்தமாக 'சுரதாம்' என்ற ஓர் வீட்டைக் கட்டி தன் வாழ்நாள் காலத்தின் கடைசி மணிவரை அதனில் கழித்தார். கல்கத்தாவில் வந்ததும் அவர் சீதை, மேவாட்பதன், ஷாஜஹான், சொஹ்ராப்ருஸ்தம், சந்திரகுப்த, புனர்ஜன்ம, திரிவேணி, பரபாரே இவ்வெட்டு புத்தகங்களையும் வெளியிட்டார். வேறு அபூர்வமான சிங்களவிஜயம் வங்கநாரி இரண்டும் இங்குதான் எழுதப்பட்டன. 1912-ம் வருடம் இவர் அநித்திரா ரோகத்தாலும் வேறுபல வியாதிகளாலும் பீடிக்கப்பட்டமையால் உத்தியோகத்தை விட்டுவிட்டார். உத்தியோகத்தை விட்டுவிட்டாலும் தாம் நாடகம் பிரஹஸம் முதலியவைகளை எழுதுவதை விடக்கூடவில்லை இதைத் தவிர 'பாரதவர்ஷ' என்னுமோர் பத்திரிகை யொன்று வெளியிட ஆரம்பித்து அதற்காக மிகவும் பாடுபட்டார். இதனால் தேகநிலை மிகவும் கெட்டுவிட்டது. 1913ளு மே மாதம் 17தேதி தமது படுக்கையில் உட்கார்ந்துகொண்டு சிங்கள விஷயத்தின் பிரதியை திருத்திக்கொண்டிருந்தார். சோம்பல் முறிப்பதற்காக கையைத் தூக்கியவர் மூளையிலுள்ளதோர் நரம்பு ஒடிந்துவிட்டமையால் கத்திக்கொண்டு மூர்ச்சையானார். இவரால் ஸ்தாபிக்கப்பட்ட 'கவினிகிளப்பில்' பிலியார்ட் ஆடிக்கொண்டிருந்த இருவர் ஓடிவந்து இவர் நிலையைக் கண்டு பந்துமித்திரர்களுக்கு செய்தியனுப்பினர். எல்லோரும் வந்து சேர்ந்தனர். சிகிச்சை பல செய்தும் பலியாமல் இரவு ஒன்பதுமணி சமாருக்கு த்விஜேந்திரலால் ராய் விழியாத் துயில் கொண்டார். த்விஜேந்திரலால் இயற்றிய புத்தகங்கள் மொத்தம் 26. (1) மேவாட்பதன் (மேவான் வீழ்ச்சி) (2) துர்க்காதாஸ் (3) ராணா பிரதாபசிங் (4) சந்திரகுப்த (5) சிங்கள விஜயம் (6) தாராபாய் (7) ஷாஜஹான் (8) நூர்ஜஹான் (9) பரபாரே (அக்கரை) (10) வங்கநாரி (11) விரஹம் (12) பாஷாணி (13) சீதா (14) சுஹ்ராப் ருஸ்தம் (15) புனர்ஜன்மம் (16) கல்கி அவதாரம் (17) த்ரயஸ்பர்ஸ (18) எக்கரே (19) மிகவும் நன்று (20) ஆனந்த பிரிவு (Parody) (21) மந்திர காவியம் (22) ஆஷாடே (23) ஹாவிர்கான் (24) ஆலேக்ய (25) திரிவேணி (26) ஆர்யசாதா (இரு பாகம்) இவற்றுள் 1 முதல் 8 வரை சரித்திர சம்பந்தமானவை. 9—11 ஆசார சீர்த்தமானவை. 12—14 புராண நாடகங்கள் 15—20 ஹாஸ்ய நாடகங்கள், 21—26 கவிதைகள்.

த்விஜேந்திர பாபுவின் நாடகங்களுக்கு ஈடாக வேறு பாஷையில் உளதோ வில்லையோ அது எமக்குத் தெரியாது. ஆனால் தமிழில் அவைகட்கு ஈடாக ஒன்றுமில்லை. த்விஜ பாபுவின் பாஷை கம்பீரமும் ஆழ்ந்த பக்தியும் வன்மையும் உடையது. கல்பனா விஷயத்திலும் அவர் பின்வாங்கியவரல்ல. அவருடைய வீரரச நாடகங்களைப் படிக்கும்பொழுது என்போன்ற பலஹீனமுள்ளவர்களின் ரத்தமும் கொதிப்பெடுக்கிறது. அவருடைய பாஷை மெஸ்மெரிஸம் நிறைந்தது என்று சொல்வது மிகையாகாது. துர்காதாஸ் நாடகத்தில் ஓர் இடத்தில் திருலர்கான் பின்வருமாறு கூறுகிறான்.

"ஹிந்துக்களும் முஸல்மான்களும் தங்கள் தங்கள் மதம் தேசம் ஆசார விவகாரங்கள் இவற்றின் வித்தியாசத்தை மறந்து மண்டியிட்டு கைகூப்பிஒரே குரலுடன், பக்தியுள்ளவர்களாய், இந்த ஹிந்துஸ்தானத்தின் பசுமை நிறைந்த பூமியில் நின்று நாற்புரங்களிலும் பிரதிஒலிக்கும்படி ஜய ஜயவென முழங்க, வேண்டுமென நான்விரும்புகிறேன். இவ்விந்தியாநமது தாய்; நாம்ஹிந்து முஸல்மான் ஒரு தாயின் இருபுதல்வர்; இருவரும் சகோதரர்கள்; என்ற எண்ணம் தோன்றவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்."

ஆஹா! எவ்வளவு உயர்ந்த எண்ணம்! ஒவ்வொருவரும் இதே எண்ணமுடையவராயிருந்தால்—? 'இன்ப உலகமென்று பாடுவோ' மன்றோ?

ஜ. கிருஷ்ணமூர்த்தி

> உன்னைக் காண்பவர் உன்னிடம் பேசாமல் கர்வித்து நின்றால், நீயும் அதற்குமேலாக மவுனத்தோடு இருந்துவிடு. அவர் ஒரு சிறித்து உன்னிடம் தலையசைப்பின், நீயும் அசை.

வேலை வாங்கும் எஜமானர் தாம் என்ன தவறு செய்யினும அதை உணர்கிற தில்லை. வேலையாட்களின் குற்றங்களையே ஆராய்கிறார்! தான் உடைத்தால் பொன்கிண்ணியும் மண்கிண்ணி.

கிழட்டு ரோஜா

(403-பக்கத் தொடர்ச்சி.)

“என்ன அண்ணா! நான் கேட்டதற்குப் பதிலைக் காணோமே, உன் எஜமானனுடைய ஆட்டுக் குட்டியை நான் கொண்டு போனால் அதில் உனக்கு என்ன நஷ்டம்? இவ்வளவு விசுவாசத்துடன் நடப்பவர்களுக்குத்தான் கடைசியில் சொட்டுச்சொல் கிடைக்கிறது; கைவிடப்படுபவர்களும் அவர்களே. அண்ணா! இதையெல்லாம் நீ முன்னமே பட்டிருக்கிறாய். உனக்கு இப்போது கிடைக்கிற அன்னம் நான் சொன்ன உபாயத்தால்தான். அந்த நன்றியை மறவாதே” என்றது நரி.

ரோஜா வெகுநேரம் யோசித்துவிட்டு, எஜமானத் துரோகம் ஒரு நாளும் கூடாது; நாம் இருவரும் பிச்சைக்குப் போவோம், அதில் கிடைக்கும் காசைக்கொண்டு நீ எங்கேயாவது ஒரு ஆட்டுக் குட்டியை விலைக்கு வாங்கிக்கொள் என்றது. நரியும் அதற்கு சம்மதித்தது. ரோஜா தன் வாயில் ஒருசிறு கூடையைக் கவ்விக்கொண்டு புறப்பட்டது. அதைக்கண்ட எஜமான் எங்கே இது போகிறதென்று மறைவாய்ப் பின்தொடர்ந்தான்.

ரோஜா ஒரு கடையின் அருகே போய் நின்றது. உடனே நரி ரோஜாமீது ஏறி அதன் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றைப்பிடித்துக் கொண்டு சவாரி செய்து வேடிக்கை காட்டிற்று. இந்தக் காட்சியைக் கண்ட கடைக்காரன் தன் குழந்தையிடம் காலணாவைக் கொடுத்து ரோஜா கவ்விக்கொண்டிருந்த கூடையில் போடும்படி செய்தான்.

ஒரு கடைக்காரன் இவ்விதம் செய்யவே, எல்லா கடைக்காரர்களும், இந்தவேடிக்கையைப் பார்க்கச் சுற்றியிருந்த ஜனங்களும், ரோஜாவின் கூடையில் காசுகளைப் போட்டு அனுப்பினர். ஒரு கடையண்டை வந்ததும் நரி ரோஜாமீது ஏறிச் சவாரிசெய்து காட்டும். கூடையில் காசு விழுந்ததும் நரி உடனே இறங்கி அடுத்த கடைக்கு நடந்து சென்று அங்கு தன் வேடிக்கையைக் காட்டும்.

மற்றவர்களின் கையெழுத்திலுள்ள கோணல்களை அது சரியாயில்லையென்று திருத்துவர். ஆனால் தங்கள் எழுத்திலுள்ள கோணல்களைக் கவனிப்பதில்லை.

கடைசியில் மூன்று ரூபாய்க்கு மேற்பட்ட துட்டுகளோடு இந்த அண்ணாவும் தம்பியும் எஜமான் வீட்டுக்குத் திரும்பினார்கள். ரோஜாவும் நரியும் அப்பணக் கூடையை எஜமான்முன் வைத்தன. எஜமான் கூடவே மறைவாகக் கடைசி வரைக்கும் போய்வந்தவனல்லவா? அவன் வெகு ஸந்தோஷப்பட்டுக்கொண்டு இரண்டையும் தட்டித் தடவித் தந்து திருப்தியான ஆகாரம் போட்டான். நரி வெகு சந்தோஷமடைந்தது. அன்றுமுதல் வாரத்துக்கு இரண்டு தடவை வெளியே போய் இந்த மாதிரி துட்டு சேர்த்துவர இந்த அண்ணனும் தம்பியும் தொடங்கினார்கள். எஜமானனும் இந்த இரண்டின்மீதும் மிகப் பிரீதிவைத்து மூன்று வேளைக்கும் உணவிட்டுப் பக்ஷமாய் நடத்துவதானான். காசுகள் கொண்டு வந்து கொடுப்போரிடம் எல்லோருக்கும் பிரீதிதானே! நரி ஆட்டுக்குட்டியைத் திருடநினைத்த எண்ணத்தைவிட்டு விட்டு, தன் அண்ணாவைப் போல் தானும் அந்த எஜமானனிடம் அதிகப் பிரியம் வைத்து நடக்கத் தொடங்கிற்று. ரோஜாவினுடைய உத்தம குணங்கள் நரிக்கும் உண்டாய்விட்டன. இவ்விரண்டும் சேர்ந்து பிரதிவாரமும் ஆறுரூபாய்க்கு குறையாமல் எஜமானனிடம் கொண்டு வந்து கொடுத்துவிடும். மொத்தம் மாதத்துக்கு 24-ரூபாய் ஆகிவிடும். அதாவது உயர்தரக் கல்விகற்ற ஒருவனின் ஆரம்ப உத்தியோக சம்பளமாகும்! ரோஜாவும் நரியும் எஜமானனிடம் சுகமே வாழ்ந்தன. குழந்தைகளே! நீங்களும் ரோஜாவைப்போல் விஸ்வாச மனதுடன் உத்தமர்களாக இருங்கள்.

II

குழந்தைகளின் இன்ப மொழிகள்.

தாய்:—நீ ஆட்டுக்குட்டியா? வீட்டுக்குட்டியா?

குழந்தை:—நான் ஆட்டுக் குட்டி, நீ வீட்டுக்குட்டி.

குழந்தை:—அப்பா, நீ பெட்டி நிறைய எல்லாம் பணமாக வைத்திருக்கிறாயே, எனக்கு அதைக் கொடுக்கக் கூடாதா?

தந்தை:—எல்லாம் உனக்குத்தான்.

குழந்தை:—அப்படி யானால் இப்பவே கொடு.

தந்தை:—உனக்கு சக்கரை மிட்டாய் வாங்கிக் கொடுக்கட்டுமா?

தாதா:—அடே வேணு! நீ அக்கா காலில் விழுந்து கும்பிடு. அக்காதான் உனக்கு நாளைக்கு சோறு போடுகிறவள். கும்பிட்டால்தான் சோறு.

குழந்தை:—என்ன தாதா! நீ உன் அக்கா காலில் விழுந்து கும்பிட்டாயா? கும்பிட்ட பிறகுதான் உனக்கு சோறு கிடைத்ததா?

***

குழந்தை:—பாட்டியை நன்றாக அடிக்கவேணும்.

தாய்:—ஏன் அப்பா அடிக்க வேண்டும்?

குழந்தை:—பின்னே, சொன்ன பேச்சு கேட்காவிட்டால்?

***

தாய்:—இந்தா கல்கண்டு.

குழந்தை:—அக்காவுக்கு?

தாய்:— அக்காவுக்கு வேறே வைத்திருக்கிறேன். இதை நீ எடுத்துக் கொள்ளு.

ஆங்கில—தமிழ்க் கடிதங்கள்

(All Rights Reserved.)

Letter IX

To a Correspondent requesting the Payment of a sum of money.

Sir,

Although the balance of the account between us has been of long standing in my fovour, yet I would not have applied to you at present, had not a very unexpected demand been made upon me for a Considerable sum, which without your assistance, it is not in my power to answer. When I have on opportunity of seeing you, I shall then inform you of the nature of this demand, and the necessity of my discharging it. I hope you will excuse me this freedom, which nothing but a regard to my credit and family could oblige me to take. If it does not suit you to remit the whole, ;part will be thankfully received by.

Your humble servant,

Hafiz Sahib.

9—ம் கடிதம்

கொடுக்க வேண்டிய பணத்துக்காக ஒரு வியாபாரிக்கு எழுதியது.

ஐயா,

நமக்கு இருக்கும் கணக்கின் பாக்கி நெடுநாளாக எனக்குச் சேர வேண்டியதாக இருந்தாலும் நான் ஒருவருக்குக் கொடுக்கவேண்டிய பெருந் தொகையை இத்தனைத் திடீரென்று என்னை அவர் கேளாதிருந்தால் இந்நேரம் உம்மைக் கேட்க மாட்டேன். அந்தத் தொகையை உமது ஒத்தாசை யில்லாமல் செலுத்த என்னாலில்லை. எனக்குச் சமயம் கிடைத்து உம்மைக் காணும் போது அந்தக் கடனுடைய விவரத்தையும், அதை நான் செலுத்தி விட வேண்டிய அவசரத்தையும் உமக்குத் தெரிவிப்பேன். பேதம் இல்லாமல் இதை எழுதியதற்கு என்னை மன்னிப்பீர் என்று நம்பியிருக்கிறேன். இப்படிச் செய்ய என்னை உடன்படுத்தியது எனது நாணயத்தின் பொருட்டும் குடும்பத்தின் பொருட்டும் உள்ள ஒரு பாதகாமே யொழிய மற்றொன்று மல்ல. பாக்கியை முழுமையும் செலுத்த உமக்கு இசையாவிட்டால், எவ்வளவு கொடுத்தாலும் நன்றியறிந்த தன்மையோடு பற்றிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

வணக்கமுள்ள உங்கள் ஊழிய

ஹாபீஜ் ஸாகிபு.

ஸ்ரீ ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி

— அவரது கொள்கைகள். —

ஸ்வாமி தயாநந்த சரஸ்வதி தமது "சத்தியார்த்தப் பிரகாசம்" என்ற நூலில் எல்லா மதங்களைப் பற்றியும் கண்டனம் செய்திருக்கிறார். ஒன்றையாவது அவர் விட்டுவிடவில்லை. நூலின் முடிவில் தமது கொள்கைகள் இன்னின்னவென விஸ்தாரமாய் விவரித்திருக்கிறார். அவற்றில் சில குறிப்புகளை மட்டும் இங்கு தருகிறோம்.

1. எவன் பிரஹ்மமோ; பரமாத்மாவோ; எங்கும் பரவி யுள்ளவனோ; சச்சிதானந்த ஸ்வரூபனோ; பரிசுத்த குண கர்ம ஸ்வபாவத்தை யுடையவனோ; சர்வஞ்ஞனோ; நிராகாரனோ; பரிபூரணமான சகல சக்தியையும் கொண்டவனோ; கருணாநிதியோ; நீதிபதியோ; சர்வ சிருஷ்டிக்கும் காரணனோ, அவைகளைப் பரிபாலித்து அழிக்கிறவனோ; சகல ஜீவன்களுடைய கர்மங்களுக் கேற்றவண்ணம் முறையே பலாபலன்களை யளிக்கிறவனோ; அத்தகையோனையே பரமேச்சுரன் என அறிந்து நம்புகிறேன்.

2. அறிவுக் களஞ்சியமாயும், தர்ம ஸ்தாபனமாயும் விளங்கும் நான்கு வேதங்களையும் தேவ வாக்கெனக் கொள்ளுகிறேன். இவைகள் சம்ஹிதையும் மந்திர பாகமுமே யாகும். பிழையன்னியில் அவைகள் தனக்குத் தானே பிரமாணமாய் இருக்கின்றன. எனவே, அவைகளைக் காக்க வேறொரு நூலின் தேவை இல்லை. சூரியன் (அல்லது விளக்கு) சுய வெளிச்சத்தினால் தன் குணங்களையும் பிரபஞ்சத்திலுள்ள ஸகல பொருள்களின் குணங்களையும் காட்டுவது போலவே வேதங்களுமாகும். வேதங்களின் உரைகளாவன:—ஐதிரேயம், சதப்தம், சாமம், கோபதம், எனப் பிராமணங்கள் நான்கு; சிட்சை, வியாகரணம், சந்தசம், நிருக்தம், சோதிடம், கற்பம், என வேதாங்கங்கள் ஆறு; ஆயுர்வேதம், அர்த்த வேதம், தனுர் வேதம், கந்தர்வ வேதம், என உப வேதங்கள் நான்கு; சாகைகள் ஆயிரத்து நூற்றிருபத்தி யேழு; இவைகளை யெல்லாம் துணைப் பிரமாணங்களாகக் கருதுகிறேன். அதாவது வேதங்களுக்கு ஒற்றுயிருக்கிற வரையிலேயே பிரமாணங்களாகும். அதற்கு மாறுங் காலத்தில் பிரயோஜனமற்றவைகளே.

3. பாரபட்சமன்னியில் அறவழியை அநுசரித்தல்; உண்மையை மனோவாக்குக் காயங்களினால் போற்றுதல்; ஈச்வர வாக்கான வேதங்களுக்கு விரோத மன்னியிலிருத்தல்; இவைகளே தர்ம மெனப்படும். பாரபட்சத்துட னிருத்தல்; மனோவாக்குக் காயங்களினால் உண்மையில்லாததைப் போற்றுதல், ஈசவர வாக்கான வேதங்களுக்கு விரோதமாயிருத்தல் இவைகளே அதர்ம மெனப்படும்.

4. ஈசுவரன், ஜீவன், உபாதான காரணமான பிரகிருதி இம்மூன்றும் அநாதி, நித்யமானது, இவைகள் எப்படி நித்தியமோ அப்படியே இவைகளுடைய குணகர்ம ஸ்வபாவங்களுமாகும்.

5. பிரபஞ்சம் படைக்கப்பட்டது. படைத்தவர் மேற்சொன்ன ஈசுவரன் பிரபஞ்சத்தின்கண் காணப்படும் அமைப்பையும், விதை முதலானவைகளைப் போன்ற ஜடப் பொருள்கள் சுயமாகவே ஏற்றவாறு சேர்ந்துக்கொள்ள சக்தியற்றிருப்பதையும் நோக்குங்காலே சிருஷ்டி கர்த்தாவின் தேவை தெளிவாகும்.

6. பற்பல துன்பம், துக்கம் முதலியவைகளிலிருந்து மீறி விடுதலையடைந்து சர்வ வியாபியான ஈச்வரனிடத்திலும் அவனுடைய சிருஷ்டியிலும் நிர்ணயம் செய்த காலம் வரையில் திருப்தி இன்பத்தை யனுபவித்து ஆனந்த மடைந்தபின்னர் சுயரூபத்தில் உலகத்திற்குத் திரும்புவதுமே முக்தியாகும்.

7. முக்திக்குச் சாதனங்களாவன :—யோகாப்பியாசம், தர்மானுஷ்டானம், பிரம்மச்சரியாப்பியாசத்தினால், அறிவைப் பெறல், அறிவாளர், புத்திமான் இவர்களுடைய சேர்க்கை, மெய்ஞ்ஞான வாசை, நல்லெண்ணம், புருஷப் பிரயத்தினம் முதலியன.

8. தர்ம வழியில் பெறுவது அர்த்தம் (பொருள்). மாறான வழியில் பெறுவது அனர்த்தம்.

9. தர்மம் அர்த்தம் இவைகளினால் விளைவதே காமம்.

10. குண கர்ம ஸ்வபாவப்பிரகாரம் வருணாச்சிரமத்தை யறிகிறேன்.

11. நீர விளங்க ஆலோசித்து, எச்சமயத்திலும் உண்மையைக் கைக்கொள்ளப் பேராவல் கொண்டு, அநியாயத்தை யழித்து, நியாயத்தை நிலைநிறுத்தி, தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினைப்பவனையே நீதிமான் என்று எண்ணுவேன்.

12. அறிஞர்களே தேவர்கள், அறிவிலிகளே அசுரர்கள். தீய பாபத்தை மதிக்கிற தீயோர்களே, பிசாசுகள், குணவேஷதாரிகளே இராக்ஷசர்கள்.

13. அறிஞான், பெற்றோர், ஆசாரியன், அதிதி, நீதிமான், அரசன் தர்மாத்மா, பதிவிரதை, ஏகபத்னி விரதன் இவ்விதமானவர்களை மதித்துப் பூஜை செய்வதே பூஜையாகும், இதற்கு மாறாய் இவர்களுடையவும் ஏனைய மூர்த்திகளையும் பூஜிப்பது அதேவ பூஜையாகும். மேற்படியார்களை பூஜிப்பதே ஏற்றது. வெறுமை உயிரற்ற சடங்களைப் பூஜிப்பது ஏற்காததே.

14. அறிவு, ஞானம், அறவழி, தன்னடக்கம், முதலானவைகளைப் பெற எது துணையாயிருக்கிறதோ எதனால் அவித்தை முதலான குற்றங்கள் குறைகள் நீங்குகிறதோ அதுவே சிட்சை (பயிற்சி.)

15. துன்பக்கடலைத் தாண்டத் துணையா யிருப்பதே தீர்த்தம். எனவே அவைகளாவன :—மெய்யுரைத்தல், அறிவு வளர்ச்சி, நல்லோருடன் இணங்கல், இயம நியமங்களைப் பழகுதல், யோகப்பியாசம் செய்தல், புருஷப் பிரயத்தினம், அடக்கம், மனக்கட்டு, பெருந்தன்மை, விஞ்ஞானவாராய்ச்சி, உதார குணம் ஆகியவைகளே. அறிவிலிகள் வழங்கும் நகரங்கள், நதிகள், ஓடைகள், முதலானவைகள் துன்பக்குழியும் பயங்கரப் பள்ளமுமேயாகும்.

(அடுத்த ஸஞ்சிகையில் முடியும்.)

பெரியாரின் மொழிகள்

(466-ம் பக்கத் தொடர்ச்சி.)

190. All that inhabit this great earth,
Whatever be their rank or worth,
Are kindred and allied by birth,
And made of the same clay.

LONGFELLOW.

இந்தப் பெரிய உலகத்திலுள்ள எல்லோரும் அவர்கள் என்ன பதவியி லிருந்தாலும், எவ்வளவு மதிப்புள்ளவர்களா யிருந்தாலும் பிறப்பினால் ஒருவருக் கொருவர் உறவினராவார். ஒரே வஸ்துவினால் செய்யப்பட்டவரா யிருக்கிறார்கள். —லாங்பெல்லோ

191. Nothing useless is, or low;
Each thing in its place is best. LONGFELLOW.

ஒன்றும் உபயோக மில்லாமலு மில்லை; தாழ்ந்ததுமில்லை. எதுவும் அதனதனுடைய இடத்தில் நிரம்ப மேலானதாகும்.

192. It is a world full of hearts ... and a serious world, with all its folly DICKENS.

உலகம் இரக்கம் நிறைந்தது. முட்டாள் தனம் இருந்தாலும் பயபக்தி யுள்ளது.

193. Condemn the fault and not the actor of it.

SHAKESPEAR.

குற்றத்தை நிந்தி; குற்றம் செய்த மனிதனை நிந்தியாதே.

—ஷேக்ஸ்பியர்.

194. Not die; but live a life of truest breath,
And teach true life to fight with mortal wrongs.

சாக வேண்டாம்; உண்மையான வாழ்வில் வாழ். மரணத்தை யுண்டு பண்ணக் கூடிய தப்புகளோடு சண்டையிட உண்மையான உயிருக்குப் போதனை செய்.

195. In love of home the love of country has its rise.

DICKENS.

தேசாபிமானத்திற்குக் கிருஹாபிமானம் ஆரம்பம். —டிக்கன்ஸ்.

196. It is the heart and not the brain, That to the highes doth attain. LONGFELLOW.

மேலானதை அடைவது அன்பே ஒழிய ஞானமில்லை.

197. He who respects himself
is safe from others;
He wears a coat of mail that
none can pierce.

LONGFELLOW.

தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்பவன் பிறரிடம் ஜாக்கிரதையா யிருக்கிறான். அவன் ஒருவராலும் துளைக்க முடியாத கவசத்தைத் தரிப்பவனாகிறான்.

—லாங்க் பெல்லோ.

பி. இ. பாஷியம் நாயுடு, 'மனோகர விலாஸ்' ஸ்ரீரங்கம்.

வீட்டுப் பெண்கள் நம்மீது அன்பாயிருக்கும் வரையில் அந்தவீட்டுக்குப் போகலாம். வீட்டுப் பெண் நம்மை விரோதித்தால் அவன் புருஷனும் நம்மைக் கவனியாமல் ஊமையாக இருந்துவிடுவான். இது எங்கும் காணும் அநுபவம்.

நோயின்றி வாழலாம்.

1. நமது உணவே நமக்கு நட்பும் பகையும்.
2. உடல் நிலையறிந்து உணவைக் கொள்ளுங்கள்.
3. ஜ்வர காலத்திலும், அஜீரண காலத்திலும் நீங்கள் உண்ணும் உணவு விஷமாக மாறுகின்றன.
4. ஓர் நாளைக்கு இரண்டு வேளை யாகாரமே உங்களை இரட்சிக்கும் தோழனாகும். பல வேளைகளில் பசியில்லா நேரத்தில் உட்கொள்ளும் ஆகாரம் பகைவனிற் கொடியோன்.
5. வென்னீ ரருந்துதலே மிக நன்மை.
6. பழம் காய் கிழங்கு பால் மோர் நெய் முதலிய இயற்கை உணவுகளை உட்கொள்ளுங்கள்.
7. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்.
8. கூழானாலும் குளித்துக் குடி.
9. கந்தை யானாலும் கசக்கிக் கட்டு.
0. பகலில் அரைவயிறு அன்னமும், கால்வயிறு தண்ணியும்.
1. இரவில் கால்வயிறு தண்ணியும் கால்வயிறு ஆகாரமும் கொள்ளுங்கள்.
2. இரவில் உண்டபின் சிறிது தூரம் நடத்தலே நன்மை.
3. அதிகத் தூக்கம் ஒருவனை வீண் சோம்பேறியாக்கி விடுகின்றன.
4. ஒரு மனிதன் ஓரிரவில் ஆறுமணி நேரம் தூங்குதலே நன்மை.
5. நல்ல சுத்தக் காற்றை உட்கொள்ளுங்கள்.
6. திறந்தவெளியில் மிதமான காற்றில் படுத்தல், அழுக்கற்ற சுத்த வெள்ளையுடை தரித்தல், கெட்ட காற்று முதலியன உட்செல்லாவண்ணம் சட்டை யணிதல், காலையில் ஸ்நானஞ் செய்தல் முதலியன உங்கள் உடம்பைக் காக்கும் ஓர் உத்தம நண்பனாகும்.
7. காலையில் எழுந்ததும் எல்லா அவயவங்களிலுள்ள இரத்தமும் ஒருமித்து ஏககாலத்தில் வேலை செய்யும்படியான தேகப்பயிற்சியை நித்தமும் நீங்கள் செய்வீர்களானால் நோயற்ற வாழ்வு வாழ்வீர்கள்.
8. மதியை மயக்கும் கள்ளையும், காப்பியையும், புகையிலையையும் உபயோகிப்பதை உடனே நீக்குங்கள்.
9. சுகாதார முறையைத் தழுவி நடந்தால் 100–வயது வரை வாழ்வீர்கள்.

☞ இது தேவகோட்டை சரஸ்வதி வாசகசாலை மாணவர் ங்கத்தின் பிரசுரம்.

பழமொழிக் குறிப்புகள்

1. அன்பு.

(452–ம் பக்கத் தொடர்ச்சி.)

85. ஏண்டி பாட்டி மஞ்சள் குளித்தாய்?-பழயநினைப்படா பேராண்டி!

இது ஒரு வேடிக்கையான பழமொழி. ஆயினும் அன்பின் ஆழம் இத்தகைத்தென்று நன்கு காட்டுவது. அன்புக்கு என்ன தொழில்? சென்றுபோன நாட்களை நினைந்து நினைந்து நொந்து வெந்து போவதே. அன்போடும் ஒரு காலத்தில் பழகிய ஒரு விஷயம் மற்றொரு காலத்தில் நம்மை அறியாமலே தோன்றிக் கொள்கிறது. சிறுபோதில் விளையாட்டினிடத்து எவ்வளவோ அன்புவைத்து நின்றோம். அந்த அன்பில் நமது புசிப்பு வேளையைக்கூட மறந்து போனோம். இப்போதோ பெரிய மனிதர்களாகவும், மனுஷிகளாகவும் ஆகிவிட்டோம். இப்போது நாம் விளையாடினாலோ பார்ப்பவர் பரிஹஸிப்பர். ஆயினும் நமது கண்மணிகளான குழந்தைகள் விளையாடும் போது நமக்குச் சிறுபருவ நினைவு உண்டாகின்றது. அவர்களுடன் சேர்ந்து கொண்டு நாமும் சிறு குழந்தைகள் போல் நமது கௌரவத்தை யெல்லாம் மறந்து விளையாடத் தொடங்குகிறோம். இது முன்பு ஒரு காலம் விளையாட்டினிடத்து வைத்திருந்த அன்பின் ஞாபகத் தூண்டுதலாலல்லவா?

இவ்விதமே, ஒருவனுக்கு நீண்ட கேசங்கள் இருந்து, பிறகு முடி போடுவதற்குரிய நீளம்கூட இல்லாமல் உதிர்ந்து போனபின்பு, அவன் ஸ்நானம் செய்து தலையில் துணியைச் சுற்றும்போது பழய வழக்கம்தோன்றிக் கொள்வதால் துணியை நெடுக முறுக்குகிறான். பிறகு அவனே என் இப்படி முறுக்கினேம், தலையில் முன்போலவா கேசங்கள் நீண்டிருக்கிறது என்று தன்னுள் சொல்லிக்கொண்டு வீணே தலைத்துணியை நீள முறுக்கியதற்காகச் சிரித்துக் கொள்ளுகிறான்.

இப்படியே, மூக்குக்கண்ணாடி சுத்தமாயிருந்தும் அதைப்போடும் சமயமெல்லாம் துடைக்கின்றனர். இதுவும் வழக்கமாய்விட்ட ஒரு சங்கதி. கோவணம் கட்டி வழக்கப்பட்டவன் அது இல்லாத காலத்தும் இருப்பதாக எண்ணி அங்கு கைபோட, பிறகு—இல்லாமை—கண்டு வழக்கத்தின் போக்குக்கு வியக்கிறான். உலகத்திலிருந்து மறைந்து போனவர்களை ஒரு காலத்தில் அன்போடும் பெயர்சொல்லி அழைத்துக்கொண்டிருந்த ஒரு வழக்கமானது,

அவர்கள் போய்விட்ட பிறகுங்கூட ஒவ்வொரு சமயத்தில் ஒருவரின் பெயர் சொல்லி அழைப்பதற்குப் பதிலாக அந்த மறைந்தவர்களின் பெயரை நம்மையே மறந்து தவறுதலாகச் சொல்லி அழைத்துவிட்டு அப்படியே திகைத்துப் போகிறோம். அந்த சமயம் அவர்களின் நினைவும், அவர்களிடத்து நாம் வைத்திருந்த அன்பும் நமது நெஞ்சைக்குத்தித் துளைத்துப் புண்ணாக்கிவிடுகின்றது. இது இவ்விதம் பட்டவர்க்கே தெரியும். இது எதனால்? பூர்வகாலத்து வைத்திட்ட அன்பால்—அதன் விளைவால்—அதன் பழக்கத்தால் அன்றோ? வழக்கமும் பழக்கமும் ஒன்றுக்கொன்று பொருந்தி நிற்பவையே யாகும்.

இவ்வாறாகவே, மேலே கண்ட நமது பாட்டியும் தன்னை மறந்துபோய் பழய வழக்கத்தின் முதிர்ச்சியால் அருகிலிருந்த மஞ்சளை எடுத்து பூசிக்கொண்டு குளித்துவிடுகிறாள். இது அவளை அறியாமலே நிகழ்ந்த சம்பவம். பிறகு அவளுக்கே தான் செய்தது கேலிக்கு இடமாகுமென்று நினைக்க வைக்கிறது. அதே சமயத்தில் பேரனும் அங்குவந்து பாட்டி மஞ்சள் குளித்ததைப் பார்த்து அதிசயப்பட்டு "ஏண்டி பாட்டி மஞ்சள் குளித்தாய்?" என்கிறான். அவள் அதற்கு என்ன பதிலைச் சொல்வது? "பழய நினைப்படா பேராண்டி" என்று உள்ள உண்மையை உள்ளபடி தெரிவித்துவிடுகிறாள். இது ஒரு செய்கையினிடத்து ஆழ்ந்து பதிந்து விட்ட ஒருதனி அன்பின் பெருக்கத்தை விளக்கிக் காட்டுவதாயுள்ளது. இந்த வகையில் இந்தப் பழமொழி அன்பின் விளக்கத்திற்கு எவ்வளவு அருமையானதாயுள்ள தென்பதை நமது வாசகர்களே நினைத்துப் பார்த்துக் கொள்ளட்டும். இங்கு இன்னொரு குறிப்பையும் சொல்லி விடுகிறோம்; பழய பாட்டி யொருத்திக்கே இவ்விதம் தன்னை மறந்து மஞ்சள் குளிக்கும்படி நேரிடுமாகில், பருவம் வருவதற்கு முன்னரே, பக்குவ யுவதி ஆவதற்கு முன்னரே, தமது பர்த்தாவை இழந்து தவிக்கும் கன்னிகா விதந்துகளின் மஞ்சள்—மலர் இவற்றின் ஞாபகங்கள், அதனிடத்துக்கொண்ட ஆழ்ந்த பற்றுதல்கள், அன்பின் ஊற்றுகள் எத்துணைப் பெருக்குள்ளதாய் இருக்க வேண்டுமென்பதை அவரவரேதான் சிந்தித்துப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஹா! அவர்களின் ஏக்கம், துக்கம், கலக்கம், வீக்கம் கடவுள் தான் அறியவல்லார்!

86. அவளுடைய சிறகு முறிந்துபோயிற்று.

இந்தப் பழமொழியை மேலே சொன்ன கன்னிகா விதந்துகளுக்கும், அவர்களைப் போல் அன்பினரை யிழந்து பரிதபிப்போர்க்கும் வைத்துப் பார்த்துக் கொண்டால் இப்பழமொழியின் கருத்து அப்பொழுது நன்கு விளங்கும். நம்மீது அன்பு வைத்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அவ்வளவுக்கும் நமக்குப் பலம் அதிகமாம். அவர்களால் நாம் க்ஷேமமாய் வாழ்

வோம். அவர்கள் நமக்கு எக்காலத்துக்கும் பக்கத்துத் துணையாய் உதவுவார்கள். நமக்கு வாழ்க்கையில் ஒரு பெரிய தைரியத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் நமது அன்பர்களே யாவார். அத்தகைய குணாளர்களில் ஒருவர் போய் விட்டாலும்கூட நாம் சிறகை யிழந்த ஒரு பக்ஷியைப்போல் தவிக்க வேண்டியவர்களே யாவோம். போய்விட்டவர்களின் ஸ்தானத்துக்கு வேறு எவரை வைத்துப் பார்த்தாலும் பொருந்தாது. அதுவானது இயற்கைப் பல் விழுந்து விட்டபிறகு அந்த இடத்தில் செயற்கைப் பல்லை விலைக்கு வாங்கி வைத்த மாதிரிதான். அந்த செயற்கைப் பல் எதற்காவது உதவுமா? வெறும் பேருக்கும் அழகுக்குமே தவிர காரியத்திற்குப் பயன் படுமா? கரும்பைக் கடிக்குமா? பாக்கை மெல்லுமா? மற்ற பற்களோடு சேர்ந்தாவது ஒற்றுமைப்பட்டு நிற்குமா? அல்லது ஆடிக்கொண்டிருக்கிற இயற்கைப் பல்லின் உறுதி யாவது அதற்கு உண்டா? இல்லவே யில்லை. புதிதாக வந்து நுழைந்த அந்த செயற்கைப் பல் தனி தனி தான். வேறு வேறு தான். சீக்கிரமே மற்றப் பற்களைவிட்டு வெளியே வந்து விடுந்தான். இதுபோலவே மறைந்துபோன அன்பினரின் ஸ்தானத்தில், நமது நெஞ்சின் பிரிவாற்றாமைத் தவிப்பை ஆற்றிக் கொள்வதின் நோக்கத்தோடும் நாம் வைத்த அன்பினரோ செயற்கைப் பல்லைப் போல் (அன்பின்) உறுதியற்றவர்களாய் முடிந்து, நெடுக அதைப் பல சம்பவங்களாலும் நமக்குக் காட்டி விடுவார்கள். இதனை வெகு பேர் தங்களின் அநுபவத்தில் கண்டிருக்கலாம். ஆகவே "சிறகு முறிந்து போயிற்று" என்றால், இனி எவ்விதத்திலும் பெற முடியாத—இணை சொல்ல முடியாத—அன்பினர் ஒருவரை இழக்கக் கொடுத்ததானது, பறந்து கொண்டிருந்த ஒரு பக்ஷியானது தன் சிறகை இழந்து பறக்க முடியாமல் எவ்விதம் தவிக்குமோ அவ்விதத் தவிப்புக்கு நிகரானதாகும் என்பது இப்பழமொழியின் கருத்தாகும். இத்துர்ப்பாக்கியம் எவருக்கும் நேரிடாதிருக்குமாறு பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

(தொடரும்.)

சென்னையிற் நாற்பது வருஷங்களாகப் பிரசுரமாகிவந்த மஹாவிகடதூதன் பத்திரிகை தற்போது நின்றிருக்கின்றது. அதன் ஆசிரியர் மஹா பெரிய அநுபவஞானி. அவரது விருத்தாப்பியத்திலும் ஊக்கம் குன்றவில்லை. பத்திரிகை விரைவில் பிரசுரமாகுமென்று நம்புகிறோம்.

ஒரு தீமையான காரியத்தைச் செய்ய நினை[illegible] செய்யாமற் போவதிற் கொள்ளும் பூரிப்பு, நன்மை[illegible] பெறும் பூரிப்பைவிட அதிகமாம்.

காப்பக



துரைதாசர் சித்தப்பிரமை கொண்டவர்போல் நாற்புறமும் திரும்பிப் பார்த்தார். யாரை? அருமை மீனும்பாளை. சிறுவயதிற் கண்ட அந்த மாதரசியை, இப்பொழுது அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் ஸ்ரீனிவாசனுக்கு "உரிமை" யானள் என்பதையும் இதற்கு முன்பு அறியார். முதல் நாள் கூட்டம் கலைந்தது.

***

இரவு 8½ - மணிக்கு சீனிவாசனை அவனுடைய விடுதியில் சென்று கண்டனர் நமது 'அட்வகேட் ஜெனரல். ஆ! பிரிந்தவர்கூடினல்பேசவும் வேண்டுமோ? இருவரும்ஒருவரையொருவர் தழுவி, சில நிமிஷம் ஒன்றும் பேசஇயலாது ஆநந்தக்கண்ணீர் பெருகினர். பின்னர் தத்தம் வாழ்க்கையின் நலத்தை ஒருவருக்கொருவர் கேட்டறிந்து கொண்டனர். தனது பெற்றோரின் நிலைமையை ஸ்ரீனிவாசனுல் அறிந்த பொழுது தன்னை மறந்து புலம்பினர் துரை தாசர்.

***

மறுநாள் சென்னை 'தேசபக்தன்' ஆசிரியரும், (இப்பொழுது 'நவசக்தி' ஆசிரியர்) தமிழ்க்கலை வல்லுநரும் ஆன ஸ்ரீமான் திரு-வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் தஞ்சை தமிழ்ச் சங்கத்தின் வருட நிறைவுக் கூட்டம் கூடியது. புலவர்களின் "சொற்போர்" அன்றும் நிகழ்ந்தது. ஸ்ரீனிவாசன் தமிழ் மக்களுக்கு ஒருஉருக்கமான வேண்டுகோள் விடுத்தான். கடைசியாக முதலியார் அவர்கள் "உலகில் உள்ள நாடுகள் பலவற்றிலும் தலைசிறந்து விளங்கிய நமது 'பாரத நாடு' ஏழையாய், ஆண்டியாய், அடிமைச் சேற்றில் வீழ்ந்து தவிப்பதைப்போல; நம் நாட்டில் விளங்கும் எண்ணிறந்த மொழிகளுக்கும் ஒரு சிறிதும் தாழ்வு பெறுது வீறு பெற்று விளங்கிய நம் 'தமிழ்த்தாய்' வலிகுறைந்து, அழகிழந்து கண்ணீர் விட்டுக் கலங்குவதை, சகோதரர்களே! உங்களுக்கு அறிய மனம் இல்லையா? கேட்கச் செவி யில்லையா? பார்க்கக் கண்ணில்லையா? அந்தோ! கொடுமை! கொடுமை! யாரே ஈன்ற தாயை இழிவு படுத்தி இடையிற் சேர்ந்த

எவ்வளவு உட்பட்டு நடந்தும் நல்ல பேரைக் காணோம்! மீறிச்சினந்து விலகி வேறு[illegible]ட்ட பிறகோ அல்லது வேறு ஊருக்குக் குடிபோய்விட்ட பிறகோ அப்போது தான் மதிக்கவும், வெகு உருக்கமாய்க் கடிதங்கள் எழுதவும் தொடங்குகிறார்கள்.

மனைவியை மட்டும் போற்றிப் புகழ்வர்? உங்கள் 'தாயைப்' பரிதபிக்குமாறு செய்த பாவம், இப்பொழுது அந்நியரால் நீங்கள் அவமதிக்கப்படும் நிலைமைக்கு ஆளாகி யிருக்கிறீர்கள்." என்று இரண்டுமணி நேரம் கல்லும் உருகப் பேசினர். அதனுல் எத்தனை பேருடைய மனம் திருந்தியதோ அறியோம். ஆனல் துரைதாசர் முழுதும் மாறுதல் அடைந்தார். அவர் கூறிய ஒவ்வொரு மொழியும் தன்னை நோக்கிக் கூறியதாகவே நினைத்தார். இந்து மதத்தினின்றும் நழுவி, அந்நிய மதத்தைத் தழுவியது, பெற்றோரை உல்லங்கனஞ் செய்து அந்த சிற்றிடையாளை ஆதரித்தது; இங்ஙனம் ஒவ்வொன்ருக நினைந்து நினைந்து மனம் பொருமினர். தன் கண்களில் கலங்கும் நீரைப் பிறர் அறிய முடியாதபடி அடக்க அவர் அரும்பாடு படவேண்டியதாயிற்று. வருடவிழா முடிந்தது. துரைதாசரும், மீனும்பாளும் சந்தித்த பொழுது அவ்விருவருக்கும் எத்தகைய உணர்ச்சி உதித்தது என்பதை எம்மாற்கூற இயலாது. ஆனல் மீனும்பாள் துரைதாசர் நிலைமைக்கு மிகவும் பரிதாபப்பட்டாள்.

***

ராவ்பகதூர் எழுமலைப் பிள்ளையின் தோட்டம் துரவு யாவற்றையும் கடன்காரர்கள் ஒப்புக் கொண்டனர். அவர் வீடு மட்டும் மிகுதி யிருந்தது; அதையும் ஒருவருக்கு விற்றுவிட்டு; அந்தப் பொருளைக் கொண்டு, அரண்மனை போன்ற மாளிகையை விட்டு ஓர் அற்பமான குடிசையில், குபேரனய் வாழ்ந்ததுபோய் கோவணுண்டியாய் இப்பொழுது காலம் கழிக்கிருர். ஸ்ரீனிவாசனும் மீனும்பாளும் எவ்வளவோ தூரம் மன்ருடிக் கேட்டுக்கொண்டும், அவர்கள் கொடுக்கும் பொருளை ஏற்றுக் கொள்ளவோ, அவர்கள் வீட்டிற்கு வரவோ மறுத்துவிட்டார். என்பதையும் துரைதாசர் ஸ்ரீனிவாசனிடமிருந்து தெரிந்துகொண்டார்.

***

துரைதாசர் தன் உடைகளையெல்லாம் மாற்றி, எளிய வடிவம் பூண்டு, ஸ்ரீனிவாசனேடு தன் பெற்றோரைப் பார்க்கப் பிறந்தவூர் சென்ருர். ஊரை அணுகியதும், ஆசை முன்னே இழுக்க, நாணம் பின்னே தள்ள ஊர்க்குள் நுழையத் தள்ளாடினர். அங்கிருந்தே தேறுதல் கூறி அவரை யழைத்துச் செல்வதற்குள் ஸ்ரீனிவாசனுக்குப் பெரும்பாடாய் முடிந்தது. எளிய குடிசையில், வெறுந் தரையில்; கிழிந்த துணியும், வற்றிய உடலும், நரைத்த மயிரும் உடைய ஓர் முதியவர் இருகாங்ளால் இரண்டு பக்கத்து கன்னத்தினையும்பொத்தி இருமிக்கொண்டிருந்தார். "ஐயோ! என் அப்பா உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கவா இந்த பாவி பிறந்தேன்?" என்று கூறி அவர் பாதங்களில் வீழ்ந்து புரண்டழுதார் நமது துரைதாசர். அச்சமயம் முழங்காலுக்குமேல் ஓர் கந்தலையணிந்து, மண் கலயத்தில் நீர் முகந்துகொண்டு தள்ளாடி வந்தார். அவரை யீன்ற அருமைத்தாயார். அப்பொழுது அங்கே நிகழ்ந்த துயர நிகழ்ச்சிகளைக் கூறி, சகோதரர்களையும் கண்ணீர்விட்டழச்செய்ய மனமில்லாது விடுக்கின்ருேம்.

***

விருந்து வைபவத்திற்குச்சென்[ற] "லேடி"—சுந்தரம் அவர்கள் அ[ன்]

முதலிற் பேசியது பாஷையாம். பிறகு அதை அழகுபடுத்துவதற்கா[க] [உ]ண்டாக்கியது இலக்கணமாம். இலக்கியம் கண்டதற்கே இலக்கணம்.

இரவு இரண்டு மணிக்கு வீடுவந்து சேர்ந்து, தமது தனிப் பள்ளியறை சென்று அயர்ந்து நித்திரை செய்தார். காலை 8½-மணிக்கு எழுந்ததும், வேலைக்காரன் கொண்டுவந்த 'தேத்தண்ணீரை' அப்படியே பருகி விட்டு, தனது கணவனுடைய கைப் புண் எவ்வாறிருக்கிறது என்பதை அறிந்துவர அவர் படுக்கையறைக்குச் சென்றாள். அங்கே அவரைக் காணவில்லை. வேலையாளரை வினவினள். அவர்கள் யாவரும் நேற்று மாலை வாடகைக் குதிரை வண்டியில் எங்கோ சென்றனர் என்றும்; செல்லுமிடம் அறிவிக்கவில்லை யென்றுங் கூறினர். "சரி எங்காவது சென்றிருக்கலாம்" என்று தீர்மானித்துக் கொண்டு, அன்று நடந்தும் 'முனிசிபல் மீட்டிங்குக்கு' ஆஜராகிவிட்டார். மாலை 3-மணிக்கு வீட்டிற்குவந்தார். கணவனைக் காணவில்லை. அப்பொழுது தான் அவர் மனம் சிறிது திகைப்படையலாயிற்று. தாயிடம் கூறினர்; தந்தையிடங் கூறினர். "விஷயம் வெளியே அறிவிக்கப் பட்டால், பொதுமக்கள் தம்மைப்பற்றி யென்ன நினைப்பரோ" என்று கருதியாவரும் ஊமை கண்ட கனவுபோல் பேசாதிருந்தனர். இப்பொழுது வருவார்; அப்பொழுது வருவார் என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்தனர். இவ்வாறு நாட்கள் மூன்று கழிந்தன.

***

நான்காவது நாள் மாலை 4½-மணிக்குத் தமது வீட்டிற்கு வந்தார் துரைதாசர். வெளியில் 'ஸோபா'வில் சாய்ந்து சமாசாரப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்த லேடி-சுந்தரம் அவர்கள் தமது நாயகன் வருவதைச் சிறிதும் லக்ஷியம் செய்யாது அந்த பத்திரிகையிலேயே ஈடுபட்டிருந்தார். உள்ளபடி அவர் மனம் அந்த பத்திரிகையில் இல்லை: துரைதாசர் மீதுதான். ஆனாலும் அவர் சென்ற இடம் தன்பால் கூறாமற் சென்றதற்காக, அவருடையமனம் இன்னும் அதிகமாகப் புண்படவேண்டு மென்பது 'லேடி'யின் நினைவு. அதோடு அவரே தன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டு மென்பதும் இந்த லேடி அவர்களின் அபிப்பிராயம். தன் மனைவி தன்னைக் கண்டும் பராமுகமாயிருப்பதை அறிந்த துரைதாசருக்கு "சோரேல்" என்றது. தன் மனைவியின் மீது முன்னிலும் பதின்மடங்கு வெறுப்புக் கொண்டார். தானும் தன் மனைவியை ஏறிட்டுப் பார்க்காது வீட்டிற்குள் சென்றார்.

***

இரவு மணி ஒன்று அடித்தது. அவ்வளவு பெரிய சென்னை நகர் முழுவதும் 'நிசப்த'மாயிருந்தது. ரயில்வே ஸ்டேஷன் மட்டும் தூங்காது சப்தமிட்டுக் கொண்டேயிருந்தது. துரைதாசர் கட்டிலினின்றும் எழுந்து, அந்த அறையில் ஒரு பக்கத்திருந்த ஓர் 'பொத்தானை' அழுத்தினார், தமது அறை முழுதும் உடனே மின்சாரத்தால் வெளிச்சம் (Electricity) உண்டாயிற்று. ஒரு கடிதத்தில் ஏதோ ஒன்றை எழுதி, அதைத் தம் கட்டிலின்மீது வைத்துவிட்டு, அறையினின்று வெளியே வந்தார். ஏவலாளர்கள் யாவரும் அயர்ந்து நித்திரை செய்கின்றனர். யாதொரு ஒலியுஞ் செய்யாது கதவுகளைத் திறந்து கொண்டு வீதியை அடைந்தார். அடுத்த அறையில் தூக்கம் வாராது படுத்திருந்த 'சுந்தரம்' தன் கணவன் அறையில் வெளிச்சமாயிருப்பதைக் கண்டு, மெதுவாக எழுந்து சென்று பார்த்தாள். அங்கே அவரைக் காணவில்லை; அறையின் ஒவ்வொரு பாகத்தையும் கவனித்தாள். அச்சமயம் கட்டிலின் மீதே கிடந்த கடிதத்தை விரைந்து எடுத்தாள்.

"எனது ஆருயிரே! இனி என்னைக் காண முடியாது. ஆண்டவன் அருளால் சில வருடம் கூடிவாழ்ந்தோம்; எனக்கு உனது நாகரிக வாழ்க்கையின் சுகம்போதும் என்றாய் விட்டது. இனி இந்த ஏழையை மறந்து, மன்னிப்பாயாக.

உன் மதிமுகத்தை என்றும்
மறவாத,
அபாக்கியன்—துரைசாமி."

என்று எழுதி யிருந்ததைப் பார்த்ததும் சுந்தரத்திற்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. இவ்வாறு நேருமென்று ஒரு சிறிதும் நினைத்தவளல்ல.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

பெ. [illegible] ரெட்டியார்.

துபூர்லதயின் நினைவு.

அழும் குழந்தையை சமாதானப் படுத்தும் வெளியூரார் உடனே தமது குழந்தையின் ஞாபகம் நினைவுக்கு வந்து வாடுவார். வீட்டுக் கடிதம் வந்த பிறகே அவர் மனம் ஆறுதல் பெறும். இன்னும் வெளியூரிலிருக்கையில் ஒருவர் தம் குழந்தையை அடிப்பதைக் காணுவதாயின், அக்குழந்தையின் கண்ணீரைப் பார்த்து மனம் தாளமுடியாமல், என் முன்பு அடிக்க வேண்டாம் என்று அவர் சொல்ல நேரும்!

சகித்து முடியாமல் ரோஷத்தோடு அவ் வேலையினின்றும் நீங்கி விட்டான். பிறகோ ?—அவ்வேலைக்கே ஏங்கி நிற்கிறான்.

1. முற்றும் துறந்த முனிவர் கதை.

(பக்தி ரஸமும் ஞானரஸமும் செறிந்த கதை.)

இவ்வரிய கதையை "ஆநந்த குணபோதினி"யின் மூன்றாவது புது வருஷ வால்யத்தில் எதிர்பாருங்கள்.

☞ [பினங்கு, சிங்கப்பூர், மலேயா, தென்னாப்பிரிக்கா, முதலிய வெளி நாடுகளில் உள்ளோர்க்குப் பங்குனி மாத ஸஞ்சிகைக்குப் பிறகு பத்திரிகை அனுப்பப்படமாட்டா. ஆதலின் இந்த தை-மாத ஸஞ்சிகையைப் பெற்ற தக்ஷணமே புது வருஷசந்தாவை அனுப்பிவிடவேண்டும். அப்போதுதான் பத்திரிகையைத் தொடர்ச்சியாக அவர்களுக்கு அனுப்பிவர முடியும். ப-ர்.]

புத்தக விமரிசனம்.

விஜய சுந்தரி :—

[ஆசிரியர் :—பிஞங்குவாசி காஞ்சீபுரம் ஸ்ரீமான் தி. இராஜா பாதர் முதலியார். விலை அணு 12. பக்கம் 116.]

கதாநாயகனுன ராஜாராம் விஜய சுந்தரியைக் காதலித்து மணந்து இடையிற் கைவிட்டனனேனும் இறுதிவரையும் வேறு விவாகம் துணியாத உத்தம புருஷனுயுள்ளான். கதாநாயகியினது கற்புச்சிவமும் அவன் குமாரத்தி மரகதம் சுப்பிரமணியத்தைக் காதலித்து நடந்துகொள்ளும் அந்யோந்யமும், மற்றுமுள்ள கதா பாகங்களும் வாசிக்க மிக்க ரஸமாக இருக்கின்றன. விஜயசுந்தரி தன்னைப் பிரிந்த கணவனை மீண்டும் சந்திக்கும் இடத்தில் அன்புடன் ஆர்வலனைத் தழுவியதாய் திருந்தப் படுவது உத்தமமாகும். ஆடவர்களை நம்பி ஏமாறலாகா தென்பதையும் இந்த நாவல் ஒருவாறு விளக்குகின்றது.

மரகதம் தன் தந்தை யென்று அறியாமலே ராஜாராமுடன் சம்பாஷிக்கும் இடம் அத்தியந்த ஸ்வாரஸ்யமானது. நற்போதம் விளைக்கும் நூல்.

மர்மமுகி :—

[அல்லது ரஸாயனக் கள்வன். ஆசிரியர் ஸ்ரீமான் பிரபாகர சாஸ்திரியார் அவர்கள். விலை அணு 12.]

ரஸாயனக் கள்வனின் மோசங்களும் சாதுர்யங்களும் மிக்க அற்புதம் தருவன. அவனைத் தொடர்ந்து சென்று கண்டுபிடிக்கும் கஜபதியின் சாமர்த்தியமும் மெச்சத்தக்கதே. படித்துக்கெட்டபதர்களில், இக்கள்வனும் ஒருவன். வாசிப்பதற்குச் சுவையுடன் கூடியுள்ளது.

சுந்தரவதனி :—

[ஓர் இனிய துப்பறி நவீனம். ஆசிரியர் ஸ்ரீமான் பிரபாகர சாஸ்திரியார் அவர்கள் பி. ஏ. விலை அணு 12.]

ஜமீன்தார் வீரலிம்மர் தமது குமாரத்தியான சுந்தரவதனிக்குத் தமது ஜமீனை உரிமையாக்கி உயில் எழுதிவைப்பதும், அதைத் தேடி எடுக்க சில பாதகர்கள் முயல்வதும் அவர்களைப் பின்தொடர்ந்து துப்பறிபவராகிய கஜபதிசிங் சென்று, கடைசியில் சந்யாசி வேடத்துடன் யாவற்றையும் கண்டுபிடிப்பதும், துப்பறிபவரே சுந்தரவதனியின் கணவராக முடிவில் அமைவதும் வாசிக்க வாசிக்க மிக்க இன்பமே. வியப்பான சூட்சிகள் இதன் கண் நிறைந்துள்ளன. 'தர்மமே ஜெயமளிக்கும்' என்பதை இது நன்கு விளக்குகின்றது.

பிரதாப சந்திரன் :—

[ஆசிரியர் ஸ்ரீமான் G. B. மகாலிங்கம் அவர்கள். விலை அணு 4. படத்துடன் கூடியது.]

முகவுரை அநுபவமாயுள்ளது. கதாகற்பனையும் வழக்கத்தில் காண்பதாயுள்ள இயற்கை யழகுகள் ததும்பியது. கதா நாயகனின் கௌரவ குணங்களும் கதா நாயகியின் பணிந்த தன்மையும் கதையை அழகுபடுத்தி விடுகின்றது. ருதுமதியான பின்பு விவாகம் செய்வதென்ற வழக்கம் ஏற்படும் வரையில் வரதக்ஷிணைக்கு எவ்வித நிவர்த்தியுமில்லை. இக்கதையை எவரும் ப்ரீதியுடன் ஏற்பர்.

மற்ற நூல்களைப்பற்றிய விமரிசனம் தொடர்ந்துவரும். இந்நூல்கள் "ஆநந்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.

போயிற் றென்றாலும் ஏதோ கால வித்தியாசத்தால் போயிற் றென்று மனச் சமாதானமடைந்து விடுகிறான் ஆனால், பிறர் பொருளை—ஒருநகையை இரவல் வாங்கிக் கொண்டு வந்து அது காணாமற் போயிற் றென்றால் ஆ ? அவன் மனம் படும் பாட்டை—இரவல் தந்தவனுக்கு என்ன பதில் சொல்லுவ தென்று கலங்குவதை யாரறிவார் ? அவ்விதம் பட்டவர் அறிவார் ?

8. சந்தேகப் பேய் :—சந்தேகம் பிடித்தவன் காரியம் யாவும் சந்தேகத்திலும், குழப்பத்திலும் அரை குறையிலுமே முடிகிறது. தபாலில் அனுப்பிய சாமான் போய்ச் சேர்ந்ததோ சேரவில்லையோவென சந்தேகிக்கிற வனுக்குத்தான் 'சாமான் வரவில்லை' என்று கடிதம் வருகிறது, இது ஒரு சோதனை ! [தபால் பெட்டியில் கடிதத்தை போட்ட பிறகு கூட அது உள்ளே விழுந்ததா இல்லையா என்று கைவிட்டுப் பார்ப்பவரும், பூட்டிய பின்பு பூட்டைப் பல முறை இழுத்து இழுத்துப் பார்ப்பவரும் எத்தனையோ பேர்,— ப-ர்.]

9. எதிர்பார்பதில்தான் அவசரம்:- சாப்பாடு தயாராகி விட்டால் சாப்பிட வருகிறதில்லை. கூப்பிட்டாலும் இன்னும் சற்றுநேரம் போகட்டு மென்பது. சாப்பாடு ஆகிக்கொண்டிருக்கும் பொழுதுதான் 'ஆயிற்ற—ஆயிற்ற' என்று தொந்திரவு செய்வது ; இப்படியே கையிலிருக்கும் புத்தகத்தை வாசிப்பதில்லை. சென்னைக்கு எழுதிய புத்தகம் என்றைக்கு வரும் என்பதில்தான் அவசரம் மிகுதி ! அல்லது இரவல் தருகிறே னென்றவன் எப்பொழுது கொடுப்பா னென்று எதிர் பார்ப்பதில் துரிதம்—ஆவல் அதிகம். [இரவல் புஸ்தகத்தைப் படிப்பதிலுள்ள அவசரம் தன் சொந்தப் புஸ்தகத்தைப் படிப்பதில் இருப்ப தில்லை. ப-ர்]

10. முன்னால் இன்பம் ; பின்னால் துன்பம் :—கடன் வாங்குகிறவரையிலும் அலைச்சல், அயதி ; வாங்கினதும் சந்தோஷம் ; செலவில் உல்லாசம்—களிப்பு—கொண்டாட்டம். பணம் தீர்ந்ததும் பல சஞ்சலம் ! அதன் பிறகோ கடன்கொடுக்க வேண்டிய கலக்கம்—தவிப்பு—சோதனை ! [ஏமாற்றித் தாமலே நாளைக் கடத்திப் பழைய கடன் தொகை என்று போக்குக் காட்டி ஒரு பெண்ணையும் கொண்டு விடலாமா என்று கூட நினைவு—ப-ர்]

11. மேற்பூச்சு வார்த்தை :—சாமான் வாங்கி வந்தவன் உண்மையிலேயே இதுநன்றா யிருக்கிறதா? என்கிறான். அதைப் பெற்றுக்கொள்ளும் அவன் மனைவியோ தனக்கு அதிருப்தியாயினும் மேலுக்குப் பரிகாசமாய் 'ஆகா ! பேஷாயிருக்கிறதே என்கிறாள். பேதை மனிதன் அவள் வார்த்தையை உண்மையென நினைந்து மனமகிழ்கிறான் ; உலகத்தில் கணவன் மனைவி இப்படியும் உண்டு. [முகம் கோணாமல் கணவன் கொணர்ந்ததில் திருப்தியுற்று அவனை உத்ஸாகப்படுத்துபவளே வாழ்க்கைப் பக்குவம் நன்குணர்ந்த உத்தமி யாவாள் ப-ர்]

12. துன்பத்திலும் இன்பம் பெரிது :—பிரசவ வேதனையில் தாய் படும் அவஸ்தை அளப்பரிய அவதிதான். பிள்ளைபிறந்து அதன் முகத்தைப்பார்த்ததும் அவளுடைய மன மகிழ்ச்சியும் குதூகலிப்பும் அதைவிடப் பெரிதுதான் ! அப்படியே ஒரு நூலாசிரியர் ஒரு நூலியற்றுவதில் எடுத்துக்கொள்ளும் பிரயாசை மகா பெரிதுதான். எழுதி முடித்தவுடன் அவருடைய ஆனந்தம்— பரவசம் அதனிலும் பெரிதுதான் ! [ஆனால் அச்சிட்டுக் காணும் வரையில் அந்த ஆசிரியர், பருவ பக்குவ யுவதியான தன் குமார்த்தியை விவாகமின்றி நெடுங்காலம் வைத்துக் கொண்டு ஏங்குகிறவனை யொப்பத் திண்டாடி நிற்கிறார் என்பதையும் இத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். ப-ர்]

குழந்தைகளின் நினைவு. தன் வேலையின் நிமித்தம் வெளியூர் வந்துள்ளவன் தன் மக்களின் நினைவு தோற்றியவுடன் அப்படியே கலங்கிப் போகிறான். அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைக்கிறான். உடனே ஊர் போய்ப் பார்த்துவிட்டு வர எண்ணுகிறான். இப்படித் தவிப்பாய்த் தவித்து விட்டுப் பிறகு தன் வேலையில் தன் சிந்தையைத் திருப்பப் பிரயாசைப்படுகிறான்! இது மகா பெரிய வேதனை.

T. S. குழந்தைவேல் முதலியார்.

பெற்றோர்—பிள்ளைகள் முகம் ஒத்திருப்பதுபோல், ஸதிபதிகளின் முகமும் எப்படியோ ஒன்றுபோல் பொருந்திப் போய், பார்த்தவர்களுக்கு அவர்கள் தம்பதிகள் என்று தெரிந்துவிடுகிறது.

அண்ணன் வீட்டிற்குத் தம்பிவந்தால் அண்ணன் அப்போது காபியுடன் தம்பிமுன் நிற்கிறான். தம்பி வீட்டிற்கு அண்ணன் வந்தாலோ அப்பொது தம்பியின் உபசாரனை !

அந்த சாமானை இரவல் தர முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டு, பிறகு அவனிடமே போய் ஒரு சாமான் இரவல் கேட்கிறான். இப்படியும் சிலர் புத்தி !

ஒருவன்பட்ட கஷ்டத்தில் இவர்களுக்குக் கவலையில்லாவிடினும் வெகு கவலைப்பட்டவர்கள்போல் வந்து ஒப்புக்கு விசாரித்து வெகுதுக்கம் அபிநயம் புரிவார்கள்.

ஆபீஸ் மானேஜர் தனித்திருக்கும் போது நல்ல குணமுடையவர் தான், ஆபீஸ் நேரத்திலோ—? இப்படியே உடை யணிவதற்கு முன் போலீஸ் நல்லதே. அணிந்த பின்னரோ—?

நமது கடை

“தமிழ் நாடு தவமுடையது” என்று காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதியார் தமது நூலொன்றில் எழுதினர். அதைத் “தரித்திரமுடையது” என்று திருத்த வேண்டுமென்று அந்தோணி முத்து உடையார் பேசினர். “ஏன்?”—என்று தாதா சாரி சாயபு கேட்டார். காங்கிரஸ் டிக்கட் பத்து ரூபாய்க்கு உச்சியில் ஏறிவிட்டதால் அவ்வளவு தொகை தந்து பார்க்க முடியாமல் வெகு பேர் உண்மைப் பக்தர்கள் ஏமாறினர்கள் என்று உடையார் உரைத்தார். கடைசி நாள் காங்கிரஸுக்காவது ஒரு ரூபாய் டிக்கட்டு வைத்திருக்கலாகாதா பணக்காரத் தேசாபிமானிகள் ஏழைத்தேசாபிமானிகளை மறந்தார்களே — என்று ராமசாமி ராவுத்தர் அங்கலாய்த்தார்.

***

தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் எழுதிய “சத்தியார்த்தப் பிரகாசம்” என்ற — நூலைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தது. ‘அந்த நூலைச் சிறுவர்களின் கையில் தந்தால் என்னவாகும்’ என்று ஒருவர் கேட்டார், ‘என்ன வாகிறது — அதைப் படித்த பையன் மதம் கெட்டுப் பதம் கெட்டுப் பாழாய்த்தான் போவான்’ என்றார், இன்னொருவர். ‘அப்படிச் சொல்லக் கூடாது, ஸ்வாமி தயானந்தர் நாஸ்திகரல்ல, அவர் ஒரு பரம ஞானி. எங்கும் நிறைந்த கடவுளை வணங்க வேண்டுமென்றும், இந்த மத பேதங்கள் அவசியமில்லையென்றும் அவரது சித்தாந்தம்; அதை நாம் உண்மையில் ஒப்புக் கொள்ளவே வேண்டுமென்றும்; காம சாஸ்திரத்தை பாலியரிடம் தரக் கூடாதது போல, “சத்தியார்த்தப் பிரகாசத்தையும் அறிவு முதிர்ந்தவர்கள் மட்டுமே படித்தறியத் தகுந்த நூல் என்றும்’ இன்னொருவர் இயம்பினர். ‘உண்மையில் ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்தைக் கோருவதாயின் அந் நூலிலுள்ள இஸ்லாத்தின் கண்டனபாகத்தை எடுத்துவிட வேண்டு மென்று மற்றொருவர் ஆத்திரத்துடன் பேசினர். ஹிந்துக்கள் புத்தர்கள் அநுஷ்டிக்கும் மதங்களை எல்லாம் ‘சத்தியார்த்தப் பிரகாச’த்தில் கண்டித்திருந்தாலும் முடிவில் ஹிந்து சமயத்தின் சிகரமான நான்கு வேதங்களையும் அதன் உபவேதங்களையும் தயானந்தர் பக்தி பூர்வமாய் ஏற்றுக் கொள்வதால் ஹிந்துக்களின் மனம் அவரது கண்டனத்தால் அவ்வளவாகப் புண்படாதென்றும், இஸ்லாத்தின் கண்டன பாகமே மிக்க கோரமானதென்றும் மற்றொரு நண்பர் நவின்றார்.

“சத்தியார்த்தப் பிரகாச”த்தை விட சென்னைக் கிறிஸ்துவ கல்விச் சங்கத்தார் தமிழில் வெளியிட்டுள்ள மூன்றணாவிலையுள்ள “அராபியாவும் அதன் நபியும்” என்ற நூல் மிக்க விஷமத்தனமாயும் சண்டாளத்தனமாயும் இருக்கிறதென்று வேறொரு நேசர் கூறினர். குற்றமேதேரிவார்—குறுமா முனிவர் சோற்றபாவினும் ஓர் குறை சோல்வரால் ”—என்றார் இன்னொரு மித்திரர்.

***

தன் ஜீவியத்தைப் பரிசுத்தமாய் நடத்திச் செல்ல நினைத்த ஒருவன் ஒரு விலைமகளிடத்துத் தனது கற்பை இழந்துவிட்டதாயும், அதற்குப் பிறகு அறிவு தெளிந்து, அன்றிரவெல்லாம் தன் தவறுதலுக்கு வருந்தி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்க் கிடந்ததாயும், அந்த செயலுக்குப் பிறகு நாளது வரையில் அவர் வழி பிசகி நடக்கவே யில்லை யென்றும் இப்படியும் ஒரு ஸம்பவத்தைத் தாம் கண்டதாயும் அல்லாபிச்சை ரெட்டியார் ஒரு பிரசங்கம் செய்தார். சேர்க்கை சகவாசம் எவரையும் தவறிப்போக வைத்து விடும் என்றார்.

***

நம்மை எதிர்ப்பவரை நாம் அடக்குவது எப்படி யென்று ஒருவர் கேட்டார். முதலில் அவருடன் பேசுவதை நிறுத்தி விடவேண்டு மென்றும், பிறகு அவரையே ஒரு அலக்ஷியமாய்ப் பாவிக்கவேண்டு மென்றும், பிறகு அவரிடம் அதிகார முறையில் பேசத் தொடங்கவேண்டு மென்றும், பேசுகிற ஒவ்வொரு பேச்சிலும் நம்மை உயர்த்தி நாம் அவரை அடக்கி ஆளுகிற தான தன்மை அதிகமாய் இருக்கவேண்டுமென்றும், இவ்விதம் நெடுக நடத்திக் கொண்டே போய் நமது புருஷத் தத்துவத்தைக் காண்பித்து வீழ்த்தவேண்டுமென்றும் மற்றொருவர் பதில் தந்தார்.

***

‘நம்மை ஓரிடத்தில் கண்ட ஒருவன் நமக்குச் சொல்லாமலே மெதுவாக நழுவி விடுவதின் கருத்து யாதாயிருக்கும்’ என்று மூகைதீன் ஸர்மா முன்னின்று வினவினர். ‘சரி இனி இங்கு இருந்தால் கூடவே ஊர் சுற்றி அலையும்படி நேருமென்றும், அதனால் தனக்கு என்ன பிரயோஜனமென்றும், தனக்கு எவ்வித லாபமும் காணாத விஷயத்தில் எதற்காகக் கூடவே போக வேண்டுமென்றும் நீள நினைத்துப் பார்த்துவிட்டு மெதுவாக நழுவிய சுயநலம் முற்றிய மனிதனாக இருக்க வேண்டுமென்றும் இன்னொருவர் அதற்குப் பதில் சொன்னார். அதே மனிதனுக்கு நம்மால் ஆகவேண்டிய காரியம் ஒன்றிருந்தால் பத்து மைலானாலும் நம்முடன் நாய்போல் கூட வருவானென்றும் குறிப்பிட்டார்.

***

'தன்னை உண்மையாகவே நம்பி யிருந்தவர்களை ஏமாறச் செய்து கையை விரித்துவிட்டு ஒதுங்கிப் புது மனித வர்க்கமாய் முற்றிலுமே அன்னியர்கள் போல மாறிப்போனவர்களைப் பற்றி என்ன நினைக்கிற' தென்றார் ஒருவர். 'நினைக்கிறதென்ன, அவர்கள் எவ்விதம் பிறரைத் திடீரென ஏமாற விடுத்தனரோ அவ்விதமே அவர்களும் தாங்கள் நம்பி யிருக்கும் இடத்தில் படீரென ஏமாறிப்போகும்படி நேர்ந்து முன்பு தாங்கள் செய்ததற்கு பதில் இதுவோ என்று திகைக்க வைத்து விடும்' என்று இன்னொரு பூதசாமி புகன்றார்.

* * *

முன்பு பேசியபடி சாந்தி முகூர்த்தத்திற்கு பணம் தாராத வரையில் 'சாந்தி' நடத்துவதில்லையென்று தெரிவித்துவிட்ட ஒருவர் தமது மனைவிக்குப் பின் வருமாறு கடிதம் எழுதினார்:—

என் பிராணநாயகி,

என் தந்தையின் பிடிவாதத்தாலும், பணம் தரமுடியாத உனது வறுமையாலும் நான் தூர விலகி நிற்க நே[ர்]ந்திருக்கிறதற்கு வருந்துகிறேன். நாளை நான் மதுரைக்கு மாற்றப்பட்டுச் செல்லுகிறேன். அங்கு நீ வந்து விட்டால் நாம் இருவரும் ஒன்றாக வாழ்ந்து மக்களையும் பெற்று மனமகிழலாம். 'சாந்தி' என்ற சடங்கைவிட என் பிரியம் தான் பிரதானம். அது பூர்ணமாய் இருக்கிறதென்று தெரிந்து கொள். உடனே உன் தாயுடன் மதுரை வந்து சேரவும். மறு மாதம் உன் தாயுடனே நீ உன் ஊருக்குப்போகலாம். பகிரங்க சாந்தியான பிறகு என்னுடன் இருக்கலாம்.

நீலமேகராவ்.

பதில்.

ஸதா என் தியானத்தில் இருந்துவரும் என் பிராணநாதருக்கு அடியாள் அம்புஜம் சாஷ்டாங்க நமஸ்காரங்கள். தங்களின் பிரேமலிகிதம் சேவித்து ஹிருதயாநந்த முற்றேன். என் உடலும் கற்பும் ஆவியும் என்னை மாலையிட்ட மணாளராகிய தங்களுக்கு என்றுமே சொந்தமானது. தங்களிடத்தில் அதனை ஸமர்ப்பிக்க எப்பொழுதும் சித்தமாயுள்ளேன். ஆனால், அது ஒரு வைதீகச் சடங்கின்மூலம் நால்வருக்குத் தெரிந்தபின் அப்பால் நடக்கவேண்டிய காரியம். புருஷர்களாகிய உங்களை நம்பப் போகாது. மதனதாகம் தீர்ந்ததும் ஒதுங்கிவிடுவீர்கள். கருவேற்றுக் கலங்குவோர் பெண்மக்களே! ரகசியத்தில் உங்களுக்கு நான் இணங்கி அதன் பயனாகக் கர்ப்பவதியாய்விடில், பிறகு நீங்கள் அன்புமாறினும் மாறலாம். அப்பொழுது அவள் எவனுக்குக் கற்பழிந்தாளோ நான் அறியேன் என்று நீங்கள் சொல்லி விட்டால் அதன்பின்பு என் கதி என்ன? சாந்தி யாகாவிடினும் தன் கணவன் வீட்டிலேயே இருந்துவரும் பெண்ணின் கணவனும் பிறகு தூற்ற முடியாது; வீட்டில் இருப்பவர்களும் விஷயம் தெரிந்து ஜாடை

யாக இருந்துவிடுவார்கள். நமது குலத்திலிலுள்ள விஷயமோ அவ்விதமன்று. நான் என் தாய் வீட்டிலேயே விவாகமான நாள் முதல் குலமரபுப்படி இருக்கிறேன். இனி 'சாந்தி' ஆன பின்னரே உங்கள் இல்லத்திற்கு நான் வரக்கூடியவள். இந்த நிலையில் தாய் வீட்டிலிருந்து கொண்டே நான் கர்ப்பவதியாய் விட்டேன் என்றால்--தங்களுக்கு ஒரு புதுப் பெண் கிடைத்து அந்த மோகத்தில் என்னைக் கைவிட்டுத் தூற்றுவதனால், ஹா! எத்தனை பயங்கரமான படுகுழி இது? ஆதலின் என்னை மன்னிக்கவும். இப்போது என் பேச்சுக்கு வராதிருந்தால், எல்லோருக்கும் தெரிந்த பிறகு தங்கள் இஷ்டப்படி நடக்க ஒருபோதும் தடையில்லை. கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய் விடாது. என்னைப் பெறுகிற முறையில் பெற்றுச் சுகித்து இன்புறப் பிரார்த்திக்கின்றேன். தங்களின் பாதமலர் துணை.

தங்களின் சேவகி

அம்புஜம்.

☞ இத்துடன் நமது கடை முடிகின்றது. இனி பங்குனி மாதத்தில் திறக்கப்படும். மாதம் விட்டொரு மாதம் தான் நமது கடையில் வியாபாரம். அனைவருக்கும் 1928-ம் வருடம் மங்களமாய் ஆநந்தமாக நிறைவேறுக இப் புது வருஷத்தில் உண்மையான அன்பு எங்கு இருக்கிறதென்பதைக் கண்டு பிடிப்பது உங்கள் வேலையாக இருக்கட்டும்.

கணித சோதிடம்.

பரஹித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்துக்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று, விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதியனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

முழுமையும்

கவனிக்கவும்.

1928௵ ஜனவரி௴ 31தேதிக்குள் தங்களுக்கு தெரிந்த கல்நகை வேலை செய்யும் ஆச்சாரிகள் விலாஸங்களும்—ஷாப் நகை வியாபாரிகளின் விலாஸங்களும் விவரமாய் தெரியப்படுத்துபவர்களுக்கு எமது 1928௵த்திய இரண்டு வர்ணங்களில் 14½" 9½" சைஸ் உள்ள 12-தாள்களில் இங்கிலீஷ் தமிழ் ௵ ௴ உ முக்கிய பண்டிகைகள் முதலியன பிரிண்ட் செய்த அழகிய காலண்டர் இனாமாய அனுப்பப்படும்.

மேல்கண்டபடி விலாசங்கள் தெரியப்படுத்தாமல் தங்கள் விலாசம் மட்டும் தெரிவிப்பவர்களுக்கு காலண்டர் அனுப்பப்படமாட்டாது.

பத்திரிகையின் பெயரைக் குறித்தனுப்பவும்.

பி. கோபால்ஸ்வாமி நாயுடு அண் சன்

ஆபரணக் கற்கள் வியாபாரம்,

ஆலந்தூர் போஸ்ட், (மதராஸ் சமீபம்).

Supplement to this issue.

புதிய நாவல்! துப்பறியும் நாவல்!! மாண்புமிக்க நாவல்!!!

விச்சித்திரத்

துப்பறியும் கண்

THE WONDER DETECTIVE EYE

அதி ஆச்சரிய, அற்புத, சமத்காரமான திடுக்கிடும் சூட்சிகளும், காட்சிகளும், காதல் மாட்சிகளும் நிறைந்து பிரமிக்கச் செய்யும் புது விதமான துப்பறியும் நாவல்.

***616*-பக்கங்கள் கொண்டது. விலை ரூபாய் மூன்று தான்.**

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த பிரஸித்த அநுபவ ஞான கதாசிரியரும், பிரஜநுாகூலன், ஆநந்த குணபோதினி பத்திராதிபரும், பிரபல கிரந்த கர்த்தாவுமாகிய ஸ்ரீமான் **S. G.** இராமாநுஜலு நாயுடவர்கள் இயற்றியது. நவீன முறையில் அமைத்தது, வெள்ளிய தெள்ளிய நடை, மனதைக் கவரத்தகுந்த ரஸங்கள், நூதனமான கற்பனைகள். யாவும் புது விசேஷங்கள். இவ்வுலகத்து அநுபவங்களின் இன்சுவைகளெல்லாம் ஓர் உருக்கொண்டு திரண்டுள்ள நாவல்.

இதில் தோன்றும் **10** பெரிய பாகங்களின் திடுக்கிடும் விஷயங்களும், **55** காதற் கடிதங்கள் இந் நாவலைச் சுற்றி வளைந்து செல்லும் விச்சித்திரங்களும், டாக்டர் பிரஹதீசனின் துப்பறியும் தீரச் செயல்களும், இதுவரையில் எந்த நாவல்களிலும் காணாத நூதன விதமாய் இருக்கும். எல்லாம் பிரமிக்கும் ஆச்சரிய அதிசய மர்மங்களே! எவராலும் கண்டுபிடிக்க முடியாத ரகசியங்களே!

இந்த நாவல் மொழி பெயர்ப்பன்று. நான்கு வருஷங்களின் உழைப்பாகும். அளவற்ற மதிப்புடையது, மிகவும் அருமையானது, வெகு சிரமத்துடன் இயற்றப்பெற்றது. பர்வத குகைகள் வெடிப்பதுபோன்றுள்ளது. காதலை இருவரிடத்து வைத்துத் திகைக்கும் தவிப்புகளும், குடும்பத்தில் ஒருவரையொருவர் வஞ்சிப்பதின் முடிவுகளும், குணங்கெட்ட நடத்தையின் அலங்கோலங்களும், தாயாதித் துன்பங்களின் படுகுழிகளும், தர்மம் அதர்மத்தை வெற்றி கொள்ளும் மாட்சிகளும், பயங்கரமான கொலைகளும், பழிகளும், சூழ்ச்சிகளும். அவற்றையெல்லாம் மறைக்கும் திரைகளை நெடுக விலக்கிச் சென்று துப்பறியும் தீரத்வங்களும், மற்றும் அநேக அநுபவங்களும், போதனைகளும், பத்துப் பகுதிகளும், ஒருங்கே கலந்து, மஹா அற்புதகாரமான சமத்கார நிர்மாணிப்பின் முறையில் மிகு நவீனமாய் முடிக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கே இந்த நாவலுக்கு எழுதுங்கள்.

‘ விச்சித்திரத் துப்பறியும் கண் ” என்ற நாவலில் வரும்

55 காதற் கடிதங்கள்

அன்புடையார் எல்லாம் உடையார்.
நீ யாவராலும் மகிழப்பட்ட மாதரசி.
எளியார்க்கு ஈசன் துணை.
மனிதன் நினைப்பான், கடவுள் நிறை
வேற்றுவார்.
உன்னைப்போல் உலகில் உண்டோ?
கண்கள் பூத்தன, கவலை அதிகரித்
என் வீடும், என் வேலைக்காரர் [தது.
களும் தங்களுடையன.
நீ இவ்வாறு நினைப்பது இனிதோ?
குழந்தைகளின் இன்ப மொழி.
நீ அன்பின் வடிவம். [வே.
சூரியனைக் காணுந்தோறும் உன் நினை
உன்னை நினைவு கூர்ந்தேன்.
இவ் வின்பம் நீடிக்கிறது.
வருங்காலம் ஸமீபிக்கிறது.
கூடும் நாள் நெருங்குகின்றது.
அன்பு செய்யாத பாவியேன்.
உன்னை எண்ணியதும் ஓர் நீர்த்துளி.
தனியே கிடந்து தவிக்கின்றேன்.
என் மனம் உருகிற்று.
உன்னை மனதில் எண்ணினேன்.
